வழிப்பறவைகள்

டேனிஷ் கதை

ஜோதி நிலையம்

சர்வதேசக் கதைகள்

ஒவ்வொன்றும் விலை அணா எட்டு

காதற் கதை (இத்தாலியக் கதை)	க. நா. சுப்ரமண்யம்
வெற்றி (பிரெஞ்சுக் கதை)	'வாணிசரணன்'
காளி (ஜெர்மன் கதை)	க. நா. சுப்ரமண்யம்
காதற் கீதம் (ருஷ்யக் கதை)	ரா. ஆறுமுகம்
பெண் மனம் (ஸ்பானியக் கதை)	ப. திருமலை
போலி (ஆங்கிலக் கதை)	எஸ். ராஜா
தேவமலர் (ஸ்விடிஷ் கதை)	க. நா. சுப்ரமண்யம்
3 கதைகள் (ஹங்கேரியக் கதைகள்)	எஸ். ராஜா
உயிர் ஆசை (அமெரிக்கா கதை)	'புதுமைப்பித்தன்'
இசைச் செல்வன் (போலிஷ் கதை)	ப. திருமலை
வழிப்பறவைகள் (டேனிஷ் கதை)	வ. ரா.
துர்லக் (செக்கோஸ்லோவேகியக் கதை)	த. நா. குமாரஸ்வாமி

இன்னும் பல நாட்டு இலக்கியங்களிலிருந்து மொழி பெயர்த்த கதைகள் பிரதி மாதமும் வெளி வருகின்றன.

— விவரங்களுக்கு —

ஜோதி நிலையம்

திருவல்லிக்கேணி — சென்னை

சர்வ தேசக் கதை மலர் – 12

விலை அணா எட்டு

சர்வ தேச நாவல்கள்

விரைவில் வெளிவரும்

மாய சந்நியாசி

ஆண்டன் செகாவ் எழுதிய ரஷ்ய நாவல்

ஹானேரின்

பால்ஸக் எழுதிய பிரெஞ்சு நாவல்

தாய்

ஆசிரியை கிரேஸியா டெல்டா எழுதிய இத்தாலிய நாவல்

கன்னியாழி

ஆசிரியை ஸெல்மா லாகர்லெவ் எழுதிய ஸ்வீடிஷ் நாவல்

லோபி

ஆசிரியை ஜார்ஜ் எலியட் எழுதிய ஆங்கில நாவல்

கோமாளி

தாமஸ் மான் எழுதிய ஜெர்மன் நாவல்

லட்சிய பூமி

அபிரோ கள்ளாஸ் எழுதிய பின்னிஷ் நாவல்

கவிஞன் காதல்

ஹென்ரிக் ஸிங்கிவிஸ் எழுதிய போலிஷ் நாவல்

குற்றமும் தண்டனையும்

டாஸ்டாவ்ஸ்கி எழுதிய ரஷ்ய நாவல்

அவமானச் சின்னம்

நத்தானியல் ஹார்த்தான் எழுதிய அமெரிக்க நாவல்

இன்னும் செக், நார்வே, ஸ்பெயின், டச்சு, ஹங்கேரி, போர்ச்சுகல், கிரீஸ் முதலிய தேசத்துப் பிரபல ஆசிரியர்கள் எழுதிய நாவல்களும் வெளிவரும்.

வழிப்பறவைகள்

டேனிஷ் கதை

எழுதியவர்
மார்ட்டின் ஆண்டர்சன் நெக்சௌ
ஹென்ரிக் பான்டோப்பிடான்

மொழிபெயர்ப்பு
கி. ரா.

ஜோதி நிலையம்
திருவல்லிக்கேணி :: சென்னை

சர்வதேசக் கதை மலர் - 12
முதற் பதிப்பு

விலை அணா எட்டு

கபீர் அச்சுக்கூடம், சென்னை.

முன்னுரை

ஐரோப்பிய இலக்கிய உலகில் ஸ்காண்டிநேவிய நாடுகளுக்கு என்றும் ஒரு தனி ஸ்தானம் உண்டு. அந்த நாடுகளின் தென் கோடியில், வெளி யுலகின் வாசற்படியைப்போல் அமைந்திருக் கும் சிறு நாடு தான் டென்மார்க். அதனால் ஐரோப்பிய நாடு களின் கலாசாரமும், நாகரீகப் பண்பும் இதன்மூலமே வடக்கு நோக்கி வந்திருப்பதனால், அதன் முழுப் பலனையும் டென்மார்க் தேசத்து இலக்கியம் அடைந்திருக்கிறது.

வெகுகாலம் வரையில் இலக்கிய விமர்சகனுக்குத் தான் அங்கே மதிப்பு இருந்துவந்திருக்கிறது. புதுப்புது இலக்கிய உறுப் புக்களைப்பற்றி விமர்சிப்பதும், புதிய எல்லைக் கோடுகளை நிர்ண யிப்பதும் அங்கே சகஜமாயிருந்தது.

சமீப காலம் வரையில் விமர்சகனே தான் தனியாட்சி செலுத்தி வந்தான். உலகப் பிரசித்திபெற்ற மாகிமனிக் கதை யாசிரியரான ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்சன் கூட வெகு காலம் வரையில் உள்நாட்டில் கௌரவிக்கப்படவில்லை.

பிறகு இருபதாம் நூற்றாண்டில் புதுக் கருத்துக்கள் உதிக்கத் தொடங்கின. பல இளம் ஆசிரியர்கள் விமர்சகனுடைய யதேச்சாதி காரத்தை எதிர்த்துக் கிளம்பினார்கள். அவர்களில் முக்கியமான வர்களில் ஒருவர் இந்தக் கதையின் ஆசிரியரான மார்ட்டின் ஆண்டர்சன் நெக்சௌ.

பரம்பரைச் செல்வம் இன்றி, தெருவிலே தெரியும் பாட்டாளி யின்மேல் நெக்சௌவின் கவனம் விழுந்தது. அவன்தான் அவ ருடைய லட்சிய புருஷன்.

மிக்க ஏழைக் குடும்பத்தில் பிறந்த நெக்சௌ முதலில் சக்கிலி யாக வாழ்க்கையைத் தொடங்கினார். பிறகு கொத்து வேலைசெய்யத் தொடங்கினார். முப்பது வயதுக்குமேல் தான் அவர் எழுதத் தொடங்கினார்.

அவருடைய கதையில் ஆழ்ந்த கருத்துக்கள் முதிர்ந்த வாழ்க்கை யனுபவத்துடன் பின்னிக் கிடப்பதைக் காணலாம். அநேகம் சிறு கதைகள் எழுதி யிருக்கிறார். அவர் எழுதிய நாவல்களுள் சிறந்தவை, **பெல்லி என்ற ஜெயவீரன்** என்பதுவும், **டிட்டி : மனிதனின் மகள்** என்பதுவும் தான்.

எவ்வளவு ஏழையானாலும், எவ்வளவு தாழ்ந்த ஸ்திதியில் பிறந்திருந்தாலும் அவர்களும், மேன்மையான உயர் வாழ்க்கை வாழ முடியும் என்பதுதான் பிரஸ்தாபக் கதையின் கருத்து. அதை மிக்க நயமாக, உண்மை அனுபவத்துடன் வர்ணிக்கிறார்.

ஹென்றிக் பான்டோப்பிடான்

இவர் டென்மார்க்கின் தலைசிறந்த ஆசிரியர்களில் ஒருவர். ஒரு பாதிரியாரின் மகனாகப் பிறந்த இவர் என்ஜினீர் ஆவதற்குப் படித்தார். பிறகு உயர்தரப் பள்ளியில் பூகோள ஆசிரியராக அமர்ந்தார்.

இவருடைய கதைகள் பெரும்பாலும் குடியானவர்கள் வாழ்க்கையைப் பற்றியவை. கருத்தில் தெளிவும், கதையில் ஒரு கருத்தும் கொண்டு எழுதுவதில் இவர் தேர்ந்தவர். 1912-ல் இவருக்கு நோபல் பரிசு அளிக்கப்பட்டது.

பிரஸ்தாபக் கதையில் ஒருவித கரகரப்பின்றி செல்லும் வாழ்க்கையில் சாரமேயில்லை என்பதை எவ்வளவு அழகாக வர்ணிக்கிறார் பாருங்கள்.

ஆசிரியர்

வழிப் பறவைகள்

பீட்டர் நிக்கொலெ பர்டினுண்ட் பால்தஸார் ராஸ்முஸன் ஜங் என்பது அவன் பெயர். ரொம்ப நீளமான பெயர்தான். நீண்ட பெயர்கள் உச்சரிக்க முடியாமல் நாளடைவில் குறுகி விடுகின்றன. அவ்வாறே அவனுடைய பெயரும் நெபுச்சநெஸ்ஸார் என்று குறுகிவிட்டது. அவன் உலகத்தை நன்ருகப் பார்த்தவன். மனித ஜாதியை நன்ருக அறிந்தவன்.

அவன் தொழிலில் சக்கிலி. சுபாவத்தில் நாடோடி. இந்தப் பூமி எப்படி சூரியனைச் சுற்றிக்கொண்டிருக் கிறதோ அதைப்போலவே, சதா சுற்றித் திரிந்து கொண்டிருக்கவேண்டும் என்ற சுபாவம் சில ஜனங் களின் ரத்தத்தில் ஊறிப்போயிருக்கிறது. அம்மாதிரி பிரத்யேகப் பிறவிகளில் அவனும் ஒருவன். எங்கோ குறியில்லாமல் ஓடிவிட வேண்டும் என்ற ஆவல், அந்த அதிசயத் துடிதுடிப்பு அவனுடைய வாழ்க்கையை ஆட்கொண்டிருந்தது. எதிலும் தரிக்காமல் கத்தரித்துக் கொண்டு ஓடும் சுபாவம்தான் அவனிடம் மேலோங்கி நின்றது.

பல தடவைகள் அவன் தன் சந்தோஷத்தை உதறிவிட்டு ஓடி யிருக்கிருன். ஆனுல் பிறகு அதற்காக அவன் வருந்திய சந்தர்ப்பமே கிடையாது. இந்த நாகரிக உலகத்தின் பெரும் பகுதியில் அவன் சுற்றி யலேந்திருக்கிருன். பிரசித்திபெற்ற ஜெர்மன் குதிரை

லாயங்களின் நுணுக்கங்களும், பிரஞ்சு ராஜபாட்டை களின் ரகசியங்களும் அவனுக்கு நன்ருகத் தெரியும். பைரனீஸ் மலைத்தொடரையும், ஆல்ப்ஸின் உன்னத தொடர்களேயும் அவன் பலதடவை கடந்திருக்கிருன். ஸ்விட்ஜர்லாந்தில் ஒருகாலும், பிரான்ஸில் ஒருகாலு மாக வைத்து நின்றுகொண்டு இத்தாலிய சமவெளிகள் மீது காறி உமிழ்ந்திருக்கிருன்.

நீண்ட பிரயாணங்களின் அனுபவத்தால் தற்கால போக்குவரத்து சாதனங்களின் நுணுக்க விவரங்க ளெல்லாம் அவனுக்குத் தலை கீழ்ப்பாடமாக இருந்தன. வாடகை மோட்டாரின் இரு சக்கரங்களுக்கிடையே எப்படிப் பதுங்கிப் போவது, பிரயாணச் சீட்டைப் போக்கடித்துவிட்டதாக எப்படிப் பாசாங்கு செய்வது என்பதுபோன்ற விஷயங்கள் அவனுக்கு நன்ருகத் தெரியும். ஜிப்ரால்டரிலிருந்து ஸிஸிலி போகும்போது ஒரு பெரிய கப்பலின் உக்ராண அறைக்குள்ளே ஒளிந்து சென்றிருக்கிருன்.

ஸிஸிலியிலிருந்து கிரீஸ் போகும்போது கப்பல் கயிறு வலிக்கும் சிப்பந்தியாகப் போவதாகத் தீர்மா னித்திருந்தான். அவனுக்கு அந்தத் தொழிலில் சற்றும் பயிற்சி இல்லை என்பதைக் கண்டுபிடித்து அவனை பிரின்டிஸியில் இறக்கி விட்டுவிட்டார்கள். அதைக்கண்ட ராஜா நெபுச்சநெஸ்ஸார் மனம் சளைக்க வில்லை. அங்கிருந்து கால்நடையாகவே சுற்றி வளைத்துக் கொண்டு அட்ரியாடிக் கரையை அடைந்தான். அவன் போய்ச் சேரப் பலமாதங்கள் ஆனல் என்ன ? சூரியனை ஓயாது சுற்றிவரும் கிரகங்களைப்போல அவனிடமும் அபாரமான பொறுமை இருந்தது. எவ்வித நோக்கமு

மின்றி ஊர் சுற்றுவதில் உள்ள இன்பத்திற்காகவே அவன் சுற்றினான். பால்கன் நாடு ஒன்றில் சில கொள்ளைக் கூட்டத்தினர் அவனைப் பிடித்துக்கொண்டனர். ஆனால் ஆடைகளின் நிலைமையைக் கண்ட உடனே அருவருப்புடன் அவனை விரட்டிவிட்டனர். அதன்பிறகு அவன் அதைப்பற்றிப் பேசும்போது 'ஒரு காலத்தில் ஓர் எலி மிருகராஜாவின் உயிரைக் காப்பாற்றியது. இப்போது ஒரு சிறு பேன் நெபுச்ச நெஸ்ஸார் ராஜாவின் உயிரைக் காப்பாற்றியது' என்று பெருமையுடன் சொல்லிக்கொள்வதுண்டு.

தங்கச் சுரங்கங்களைப் பார்வையிட வேண்டுமென்று கலிபோர்னியாவுக்கு ஒருமுறை சென்றான். அங்கே போனதும் தன்னைப்போன்ற நாடோடிகளுக்கு தங்கம் ஒரு சுமையான வஸ்து என்று முடிவுசெய்து கொண்டு நியூயார்க் நகருக்குக் கம்பி நீட்டினான். பரிசாரக வேலை கிடைக்குமாவென்று அங்கு போய்ச் சேர்ந்ததும் முயற்சி செய்தான். கிடைக்கவில்லை. கப்பலில் சிற்றாள் வேலை செய்தாவது கோபன்ஹாகனை அடைந்துவிடலாம் என்று எண்ணினான். ஆனால் இரண்டிலும் தோல்வி ஏற்பட்டதும் ஒருநாள் திடீரென்று நடுவீதியில் மயக்கம் போட்டுக் கீழே விழுந்தான். அதன்பிறகு அவன் வேலை சுலபமாக முடிந்துவிட்டது. சரியான சமயத்தில் கண்ணைத் திறந்து பார்த்து, "டேனிஷ்காரன்!" என்ற வார்த்தையை சொன்னான். உடனே தெருவில் போகிறவர்கள் டேனிஷ் ராஜீயப் பிரதிநிதியிடம் எடுத்துச் சென்றார்கள். அங்கிருந்து மறு கப்பலில் டென்மார்க்குக்கு அனுப்பி வைக்கப்பட்டான்.

உண்மையில் அவன் உலகத்தையும் மனித ஜாதியையும் அறிந்துகொண்டு விட்டான். அவனுடைய தொழில் மூலம் பாதி பூ மண்டலத்தைச் சுற்றி இருக்கிறான். பெரிய பெரிய நகரங்களில் எல்லாம் வேலை செய்திருக்கிறான். குறுகிய காலத்தில் ஒவ்வொரு ஊரிலும் பார்க்கவேண்டியவை என்னென்ன உண்டோ அவ்வளவையும் பார்த்திருக்கிறான். போகிற போக்கில் தன்னுடைய தொழில் சம்பந்தமான நுணுக்கங்களையெல்லாம் அறிந்துகொண்டான். அவன் அதிக நேரம் உட்கார்ந்து வேலை செய்வதில்லை. ஆனாலும் அவன் செய்துமுடிப்பது பிரமாதமான வேலையாக இருக்கும். அவனைப்போலொத்த ஆயிரம் பேருடைய வேலைக்கு மத்தியில் அவனுடைய கைத்திறன் தனி மேன்மையுடன் பிரகாசித்தது.

ஆதியில் தான் தொழில் கற்றுக்கொண்ட இருள் சூழ்ந்த சிறிய கடையைப்பற்றி நினைத்துக்கொண்ட போது அவனுக்கே பரிகாசமாக இருந்தது. இப்போது அவன் திறமையைக் காட்டப் போகிறான். தன்னுடைய உலக யாத்திரையின் அனுபவத்தைப் பயன்படுத்திக் கொண்டு டென்மார்க்கிலேயே உட்கார்ந்து சம்பாதிக்க வேண்டும் என்பதுதான் அவனுடைய திட்டம். வீட்டுச் சமையலுக்குத் தன் உடலைப் பழக்கப்படுத்திக்கொள்வதைப்போல ஒரு மாதம் வரை அங்குமிங்கும் அலைந்தான். பிறகு ஒரு செருப்புக் கடையில் வேலைக்கமர்ந்தான்.

ராஜா நெபுச்சநெஸ்ஸார் இந்த பரந்த உலகத்தை சுற்றியிருக்கிறான். ஆகையால் அனுவசியமான சுமை எது என்பதை நன்கு அறிந்தவன். சுற்றுப்

பிரயாணத்தினுல் அவன் ஆழ்ந்த அனுபவங்களைப் பெற்றிருந்தான். அநேகம் கடைகளில் இடத்தை அடைத்துக்கொண்டு கிடக்கும் சாதனங்களும், கருவிகளும் அனுவசியமானவை என்பது அவனுடைய முடிவு. அவனைப் பொறுத்தவரை சாதாரண வசதிகளைக்கொண்டே அவன் தன் திறமையை பிரகாசிக்கச் செய்தான். ஒரு கத்தி, ஓர் ஊசி, ஒரு மரக்கட்டை, நூல், இவைகளைக்கொண்டே, மிக ஆடம்பரமான யந்திர வசதிகள் கொண்ட தொழிற்சாலையில் தயாராகும் மிதியடிகளைவிடச் சிறந்தவற்றை அவன் ஒரு மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு தயார் செய்து விடுவான்.

ஆகவே எந்தக் கடைக்கு வேலைக்குப் போனுலும் அங்கு அனுவசியம் என்று இவன் கருதும் ஆயுதங்களை விற்கத் தொடங்கினுன். இதனுல் அவனுடைய வேலைக்கு எவ்வித குந்தகமும் ஏற்படவில்லை. ஆயினும் அவனுடைய எஜமானர்கள் இந்த வழக்கத்தை வெறுத்தனர். அவன் விற்றுவிட்ட ஆயுதங்களின் விலையை அவனுடைய கூலியில் பிடித்துக் கொண்டனர். அவனை வெளியே விரட்டியதோடல்லாமல் போலீஸாரிடம் ஒப்புவிப்பதாகவும் பயமுறுத்தினர்.

அவன் தன் இருப்பிடத்திலிருந்தே வேலை செய்யத் தொடங்கினுன். தன்னுடைய ஆயுதச் சிக்கனத்தை தோலின்மீதும் பிரயோகிக்கத் தலைப்பட்டான். காகித அட்டைகளின் உபயோகத்தை அவன் நன்கு அறிந்திருந்தான். ஆகையால் தன் எஜமானர்கள் கொடுத்திருக்கும் தோலில் பெரும்பகுதியை மிச்சம் பிடித்து விடுவான். இதை விற்றுவந்த தொகையைக்கொண்டு,

இன்னும் ஒருநாள் அதிகமாக ஓய்வு எடுத்துக் கொள்வான்.

அவனுடைய சகோதரத் தொழிலாளர்கள் அவனை ஒரு மேதை என்று தீர்மானித்தார்கள். அதாவது, இரண்டொரு சாதனங்களை வைத்துக்கொண்டு, மின்னல் வேகத்தில் அதிசயமான ஜோடுகளை சிருஷ்டித்து விடுகிறான். உலகில் மற்றெல்லாவற்றையும்விட சோம்பலையும், பசியையும், மதுவையும் சமமாக காதலிக்கும் ஒருவன் என்பது அவர்களுடைய கருத்து.

ராஜா நெடுச்ச நெஸ்ஸார் ஒரு மேதை என்பதில் சந்தேகம் இல்லை. வேலைசெய்ய முனைந்தானானால் வேலைதான். மணி ஐந்தடிப்பதற்குள் இரண்டு ஜதை பெண்கள் அணியும் ஜோடுகளைத் தயாரித்துவிடுவான். அதனால் இரட்டிப்பு கூலி கிடைக்கும். அதைக் கொண்டு குடித்துவிட்டு எங்காவது சாலையிலோ, வேலி ஓரத்திலோ விழுந்து கிடப்பான். ஆனால் மறுநாள் காலையில் வேலைக்குத் தயாராக வந்துவிடுவான்.

இதுவும் அவனுக்குப் பிடிக்கவில்லை. சேர்ந்தாற் போல் இரண்டு நாள் வேலை செய்வதற்குப் பதிலாக ஒரே நாளில் மூன்று ஜதை ஜோடுகளை முடித்துவிட வேண்டும் என்று விரும்பினான்.

உழைப்பின்போது உலகை மறந்துவிடுவான். வேலையிலிருந்து தலைநிமிர்ந்து உல்லாசமாக வெளியே போகவேண்டுமென்றால், தனியாகத் தான் போக வேண்டியிருக்கும். கூட வர ஒருவரும் இருக்க மாட்டார்கள். எப்போதும் இந்தத் தொல்லைதான். யாருக்கும் தமாஷாக இருப்பதற்கு அவகாசமே கிடைப்பதில்லை. அட கடவுளே, உல்லாசத்திற்கு அவகாசம்

கிடையாதா! அவனுக்கு அது ஒன்றும் விளங்க வில்லே. உண்மையான விஷயம் அதுதான்.

இது ஒரு வேடிக்கைதான். இந்த உலகத்தில் தான் ஒரு தனியான மனிதன் என்பதைக் கண்டுபிடிக்க அவனுக்குச் சிறிதுகாலம் பிடித்தது. அவனுடைய தோழர்கள் அவனேக் கைவிட்டுவிட்டு ஆட்டு மந்தை போல் தொழிற்சாலேக்குச் சென்று உழைத்துக் கொண்டிருந்தார்கள். ஏதோ அவர்கள் தங்கள் வயிற்றுப் பாட்டை பார்த்துக்கொண்டு சமூகத்தில், கண்யத்துடன் விளங்கினர். அவர்களுக்கு மனப்பூர்வமான அரசியல் கொள்கைகளும் உண்டு. காலே ஏழு மணிக்கு கும்பலாய் வேலேக்குப் போய் சரியாக மாலே ஆறு மணிக்குத் திரும்பி விடுவார்கள். கடிகாரத்திற்கு சரியான மணி வைக்கவேண்டுமானுல் இவர்களேப் பார்த்தே வைத்துக்கொள்ளலாம். ஆனுல் பாவம் நமது ராஜாவிடம் கடிகாரம் இல்லே.

சாயங்காலத்தில் அவர்கள் அரசியல் கூட்டங்களுக்கும் போவார்கள். அது மட்டுமல்ல, அவர்கள் கலியாணமும் செய்துகொண்டு, ஞாயிற்றுக்கிழமைகளில் பெண்டுபிள்ளேகளுடன் சர்க்கஸ் வேடிக்கை பார்க்கவும் வந்துவிடுவார்கள். வாழ்க்கையை சந்தோஷமாக அனுபவிப்பதாகஅவர்களுடைய எண்ணம். தூ! இதுவா வாழ்க்கை!

ராஜா நெபுச்சட் நெஸ்ஸார் சுதந்தர புருஷன். அவனுடைய சகாக்கள் அடிமை வாழ்க்கையில் உழன்றுகொண்டிருக்கையில் அவன் சுதந்தரபுருஷனுக உலகத்தைச் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தான். அவர்கள் ஆட்டுமந்தைபோல் மணிக் கணக்கில்

தொழிற்சாலைக்குள் அடைந்து கிடப்பார்கள். அது அவர்கள் தலைவிதி! ராஜா கடைகளில் மாதச் சம்பளத்திற்குப் போக மாட்டான். தன் வீட்டிலேயே இருந்து வேலைசெய்து வந்தான். அவனுக்கு அவனே எஜமானன். தான் வேலைசெய்து கொண்டிருக்கும்போது மற்ெறுரு மேஸ்திரி வந்து தன்னை மேல்பார்வை செய்வது அவனுக்குப் பிடிக்காது. தொழிலாளர் சங்கத்தில் சேர்ந்து மூச்சுவிடுவதற்கு முதற் கொண்டு அவர்கள் உத்தரவை எதிர்பார்த்துக் கீழ்படிவதுபோன்ற முட்டாள்தனமெல்லாம் அவன் செய்ய மாட்டான்.

அவனுக்குத் தன் வேலையை தானே நிர்வகிக்கும் சக்தி உண்டு. மூன்று நாள் வேலையை ஒரே நாளில் செய்து முடித்துவிட்டு மற்ற இரண்டு நாட்களிலும் படுத்துத் தூங்க அவனுக்கு உரிமை வேண்டும். விலை விவரங்களைப்பற்றி அவனுக்குக் கவலையே கிடையாது. திடீரென்று ஒருநாள் 'இனி யாரும் வீட்டில் வேலை செய்யக்கூடாது' என்று சங்கத்தினர் தடைவிதித்திருப்பதாகக்கேள்விப்பட்டான். உடனே அவன், 'என்னிடத்தில் அவர்கள் வாலாட்ட முடியாது' என்ருன் ஏளனமாக. அவன் தன் இஷ்டப்படி தன் வேலையைச் செய்து வந்தான். அவனுடைய வேலைத் திறமையை மெச்சிய முதலாளிகள், சிறந்த வேலைக்காரன் வேண்டியஅவசியமான சந்தர்ப்பங்களில் அவனுக்கும் வேலை கொடுத்து வந்தார்கள்.

ஆனுல் அவர்கள் ரகசியமாகத். தான் அவனிடம் வேலை கொடுக்க முடிந்தது. ராஜா நெபுச்ச நெஸ்ஸார் எந்த நேரத்தில் என்ன செய்வான் என்று ஒருவராலும் சொல்ல முடியாது. பெரிய இடத்து வேலை

கையில் இருக்கும்போது திடீரென்று அவனுக்குக் கிறுக்கு வந்துவிடும். டென்மார்க் தேசத்துப் பிரமுகர்கள் அவன் கையினுல் தைத்த ஜோடுகளை அணிந்து கொண்டு பெருமையாகப் போகும்போது அவன் மாத்திரம் கை கட்டிக்கொண்டு சும்மா உட்கார்ந்திருக்க முடியுமா ?

கடைசியில் டென்மார்க் தேசம் மிகச் சிறியது, நம்து சாமர்த்தியத்தைப் பிரகாசிக்கச் செய்ய இங்கே வசதிகள் இல்லை என்ற முடிவுக்கு வந்தான். அவன் ஒரு மேதையல்லவா ! துயரம் மிகுந்த தேசத்தைவிட்டு மீண்டும் கிளம்பவேண்டும் என்று எண்ணினுன். அவனுடைய மனக்கண்முன் விசாலமான உலக அரங்கம் விரிந்து கிடந்தது. அதைப்பற்றிய சிந்தனையே அவனுக்கு மகிழ்ச்சியை அளித்தது. மறுபடியும் கட்டறுத்துக்கொண்டு கிளம்பினுன்.

ஆனுல் முன்பிருந்த உற்சாகம் இப்போது இல்லை. முன்பெல்லாம் பட்சிகளைப்போல் அவனுடைய எலும்புக்குள் காற்று நிறைந்திருந்தது. அவனைத் தூக்கிச் சென்றது. அனுயாசமாக அவன் இடத்துக்கு இடம் தாவிக்கொண்டிருக்க அவனுல் முடிந்தது. இப்போது சிட்டுப்போல் பறக்கும் அந்த மன சக்தி அவனிடம் இல்லை. அவனுடைய சரீரத்தின் சுமை அவனைக் கீழ் நோக்கி இழுத்தது. அதன் காரணம் அவனுக்குத் தெரியவில்லை. முன்பெல்லாம் ஓரிடத்தில் தங்குவதென்ருல் அவனுக்குச் சிரமமாக இருக்கும். இப்போதோ எங்கேயாவது கிளம்ப வேண்டுமென்ருல் அதற்குப் பெருமுயற்சி செய்யவேண்டி யிருந்தது.

எப்போதுமே ஒருவன் குறியின்றிப் பறந்து

கொண்டிருக்க முடியாது. சில சமயங்களில் நின்று
நிதானித்து யோசிக்க வேண்டியது அவசியம். சுற்றிச்
சலிக்கும் உலகமும், வானுயர்ந்த மலைகளும், அகன்ற
நதிகளும், முடிவற்ற பாதைகளும், இப்பொழுதெல்
லாம் அவன் மனதைக் கவர்ந்து இழுக்கவில்லை.
இப்போதுள்ள முக்கியமான பிரச்னை, அந்த சிரமத்
தைத் தாங்க உடம்பில் வலுவிருக்கிறதா என்பதுதான்.
சளைப்பின்றி நடக்கும் தன் கால் பலமும், கல்லையும்
ஜீரணிக்கும் குடல் சக்தியும் வெகுவாய்க் குறைந்து
விட்டதை அவன் உணர்ந்தான். நன்ருக சமைத்த
ருசியான ஆகாரங்கள் – உடம்புக்கு இதமான ஆடை
கள், சுத்தமான படுக்கையுடன் கூடிய ஓர் அறை,
இவைகளுடன் கூடின செள்க்கியமான வீட்டைத்
தான் அவன் மனம் நாடியது.

தன் நோக்கத்தை அடைய முயற்சி செய்தான்.
தினசரி வேலைசெய்து அவனைக் காப்பாற்றக் கூடிய
சாதுவான ஒரு ஸ்திரீயுடன் சிறிதுகாலம் வாழ்க்கை
நடத்தினுன். குடித்த நேரம் போக மற்ற நேரங்களில்
அவர்கள் இருவரும் விளையாடிக்கொண் டிருப்பார்கள்.
ஆனுல் இரண்டு வருஷங்கள் ஆவதற்குள்ளேயே
குடும்ப வாழ்க்கை அவனுக்குச் சலித்துவிட்டது.
குடும்ப வாழ்க்கையை யார் வேண்டுமானுலும் அனுப
விக்கட்டும். ஆனுல் அவனுக்குப் போதும்.

மீண்டும் தன் தொழிலைத் தொடங்க முயற்சிசெய்
தான். ஆனுல் அவனைப் போன்ற நாடோடிக்கு இப்
பொழுது தொழிலில் இடம் கிடைக்கவில்லை. அதன்
பிறகு அவன் புராதன காலத்துப் பெரியோர்கள் பலர்
செய்ததுபோல சமுதாயத்தின் செலவில் சாப்பிட

ஒப்புக்கொண்டான். அதாவது, பொதுஜன அநாதை விடுதியில் - ஒரு சமயம் பொதுஜன தொழிற்சாலையாக இருந்ததில் அடைக்கலம் புகுந்தான்.

*　*　*　*　*

உடனே அவனுக்கு ஊசியும் கத்தியும் கொடுக்கப் பட்டது. ஆனல் அவன் வெளி உலகத்துடன் போட்டி போடவா உள்ளே நுழைந்திருக்கிருன்? வெளியில் இருந்தவரையில், தொழிற்சாலை சட்ட திட்டங்களை எதிர்த்து வந்திருக்கும் அவன், மணிக் கணக்குப்படி வேலைசெய்யும் அடிமையாகவா உள்ளே வந்திருக் கிருன்? இல்லவே இல்லை. தன் தொழிலைவிடத் தன் சுதந்திரத்தில்தான் அவனுக்கு ஆர்வம் அதிகம். அவனது இடதுதோளில் குடிகொண்டிருந்த பார்ச வாயு அவனுக்குத் துணைசெய்தது. அவன் தொழில் செய்ய லாயக்கில்லை என்று முடிவு செய்து விட்டார்கள்.

கோபன் ஹாகன் நகரத்து மார்க்கெட்டுகளையும், பெரிய பாலங்களின் மேல் பரப்பையும் சுத்தம்செய்யும் கோஷ்டியில் அதிகாரிகள் அவனையும் சேர்த்தார்கள். வெளி யுலகம் பரபரப்புடன் ஜுரவேகத்தில் சலித்துத் துடித்துக்கொண்டிருக்கையில் - சிறு பட்சிகள் அங்கு மிங்கும் சிறகடித்துப் பறந்துகொண்டிருக்கையில் - அவன் கையில் துடைப்பத்துடன் சாலையிலுள்ள புழுதியை அலட்சியமாகப் பெருக்கிக்கொண்டு நிற்பான். உலகத்தின் பரபரப்பைப் புன்முறுவலுடன் அவன் கவனிப்பான், முற்றும்துறந்த பற்றற்ற ஞானி யைப்போல். மற்றவர்களைப்போலவே அவனும் வாழ்க் கையின் அடித்தளத்தை மூழ்கித் தொட்டிருக்கிருன்.

அதனால் அந்த உலக வாழ்க்கை அவன் மனத்தைக் கவரவில்லை. ஆனாலும் ஓரோர் சமயம் யாரேனும் பாதசாரிகள் தங்கள் சட்டைப் பையில் கைபோட்டு ஒரு சிறு புட்டியை வெளியில் எடுக்கும்போது - அவனுடைய நெஞ்சில் ஒரு ஏக்கம் தோன்றும். அதை அப்படியே ஆர்வத்துடன் தன் இதழ்களுடன் பொருத்திக்கொள்ள வேண்டும் என்ற ஆசை அவன் நெஞ்சகத்தே உதிக்கும். மற்றப்படி அவன் பிறரைப் பார்த்து பொறுமைப்பட சந்தர்ப்பமே கிடையாது.

ஒருநாள் அவன் வழக்கம்போல் தெருப் பெருக்கிக் கொண்டிருக்கையில், பற்றற்ற அவனுடைய மன அமைதியைக் குலைக்கும் சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

எதிர்ப்புறமிருந்து ஒரு ஸ்திரீ தோன்றி, தெருவைக்கடந்துபோனாள். அவள் தலையில் ஒரு கருப்புக் குல்லாய் அணிந்திருந்தாள். அதன் விளிம்பு இழிந்து முகத்தில் தொங்கிற்று. ஒரு பழைய போர்வையையும் கிழிந்த சட்டையையும் அணிந்திருந்தாள். அவளுடைய மூக்கும், இரு கன்னங்களும் பெருத்து தனித் தனியாக முகத்திலிருந்து வெளியே நீட்டிக்கொண்டிருந்தன. அவள் கால்களைத் தேய்த்து, இடையைக் குலுக்கிக் கொண்டு நடந்தாள். தொழிலில் தேர்ந்த அவனுடைய கண்கள் அவளுடைய நடையின் ரகசியத்தை உடனே கண்டுபிடித்துவிட்டன. அவள் அணிந்திருந்த இரு செருப்புகளும் அறுந்துபோயிருந்தன; அவை காலை விட்டு நழுவிப்போய்விடாமல் இருப்பதற்காகத்தான் அவள் காலைத் தேய்த்துத் தேய்த்து நடந்தாள்.

அவள் மால்வினாதான் என்பதை அவனுடைய இதயம் உடனே கண்டுபிடித்துச் சொல்லிவிட்டது;

அவள் அவனுடைய கடைசிக்காதலி; தன்னுடைய படுக்கையையும் மதுவையும் அவனுடன் சமமாகப் பகிர்ந்துகொண்டவள்—அவளைப் பல தடவைகள் அவன் அடித்திருக்கிறான்; அந்த உதைகளை அவளும் தன்னுடைய மயக்க நிலைக்குத் தகுந்தபடி திருப்பியும் கொடுத்திருக்கிறாள். அன்று அனாதை விடுதியின் வாசற்படியில்தான் அவளைவிட்டுப் பிரிந்தான்; அவள் பெண்கள் பகுதியில் சேர்த்துக்கொள்ளப்பட்டாள்; இவன் ஆண்கள் பகுதியில் நுழைந்தான்.

நிச்சயமாக அவளுக்கு அன்று ஓய்வு கிடைத்திருக்கவேண்டும்; மால்வினா, தனக்கு வினைத் தெரிந்தது முதல் பதினெட்டாவது வயது வரையில் ஒரு கிழட்டுப் பிரபுவின் ஆசை நாயகியாக இருந்தவள்!—மால்வினா, பெரிய மனிதர்களைப்போல் பேசக்கூடியவள், அரண்மனைமுதல் சாக்கடைவரையில் சகலவிதமான வாழ்க்கையிலும் புரண்டவள்!—அவளைப்போலவே, பூமியின் சுழற்சிப்பித்தை ரத்தத்தில் கொண்டவள்!

இப்போது அவள் விடுமுறையில் போகிறாள்!

மீண்டும் ஒரு முறை ஓடவேண்டும் என்ற ஆவேசம், தவிர்க்கமுடியாத தாகம் அவன் உள்ளத்தே எழுந்தது. துடைப்பத்தை அப்படியே வீசி எறிந்துவிட்டு, "மால்வினா! நில்!" என்று கூவவேண்டும் என்ற ஆவல் எழுந்தது. பிறகு நிதானித்துக் கொண்டான். துடைப்பத்தைப் போட்டுவிட்டு தள்ளாடி நடந்துகொண்டே மேலதிகாரியான பீட்டர்ஸனிடம் வந்து, "உடம்பு சரியாயில்லை, நான் வெளியே போக வேண்டும்" என்று உத்தரவு கேட்டான்.

ராஜா நெபுச்சநெஸார் அனாதைவிடுதியை விட்டு

ஓடமாட்டான் என்பது அதிகாரி பீட்டர்ஸனுக்கு நன்ருகத் தெரியும்! ஆகையால் அவன் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான்; தூரத்தில் நின்ற போலிஸ்காரனைப் பார்த்தான்; பிறகு எதிரில் நின்ற நோயாளியைப் பார்த்தான். உண்மையிலேயே அவன் சிக்காய் இருப்பதாகத்தான் தோன்றிற்று.

"நீ தனியாக வீடுபோய்ச் சேர்ந்துவிடமுடியுமா?" என்று கேட்டான்.

"ஆஹா! ஆனுல் என்னிடம் துட்டு இருந்தால் வீடுவரையில் வண்டியிலேயே போவேன்."

"சரி, அந்த பஸ்ஸையாவது ஓடிப் பிடித்து ஏறிப்போ!"

ஆனுல் ராஜா பஸ்ஸைப் பிடிக்கவில்லை. நோய் வாய்ப்பட்டிருந்த அவனுல் ஓடிப்பிடிக்க முடியுமா? அவன் மெதுவாகத் தெருவைக் கடந்து போவதற்குள் பஸ் மறைந்துவிட்டது.

சற்று தூரம் போனதும், அதிகாரியின் பார்வையிலிருந்து மறைந்ததும், அவன் திரும்பி வேறு திசையில் நடையைக் கட்டினுன். வழியில் அவனுடைய அனுதை விடுதி உடையைக் கண்டு யாராவது பிடித்துக் கொள்ளாதிருக்க வேண்டும் அல்லவா? அதற்காக, ஒரு பத்திரிகையும், ஒரு பெரிய மஞ்சள் உரையும் வாங்கினுன். மீதியுள்ள பணத்துக்குக் கொஞ்சம் புகையிலை வாங்கிக்கொண்டான். அந்த பத்திரிகையை மடித்து உரையில் போட்டுவைத்துக்கொண்டு ராஜாங்கமாக நடந்துபோனுன். வழியில் சந்தேகத்துடன் அவனை முறைத்துப் பார்த்த போலிஸ்காரன்கூட

அவனுடைய நடையின் போக்கைக் கண்டு பேசாமல் போய்விட்டான்.

மூலைமுடுக்குகளில் திரும்பி அவன் மார்க்கெட்டை அடைந்தபோது, தூரத்தில் மால்வினு ஒரு கட்டிடத் துக்குள் நுழைந்து மறைவதைக் கண்டான். அவள் எங்கே போகிருள் என்பதை உடனே அறிந்துகொண் டான். அவனும் உடனே மூன்ரும் மாடியை அடைந்து இருள் சூழ்ந்த தாழ்வாரத்திற்குள் நுழைந்தான்.

இருளில் மால்விஞவின் ஆடைகளின் சத்தத்தைக் கொண்டே அவள் இருக்குமிடத்தை அடைந்து, அவளுடைய இரு காதுகளையும் பற்றி அவளை முத்த மிட்டான்.

"என்ன, ராணி!"

"அட கடவுளே! நன்ருகப் பயமுறுத்திவிட்டாய் நெஸ்லார் நீ! இந்த இருட்டில் ஆள் அடையாளம் எப்படித் தெரிந்தது?" என்ருள்.

"ராணி, இளவரசனைத் தேடுகிருயா? ஒருவேளை அவன் உயிர்நீத்து விட்டானே என்னவோ!"

"அப்படியில்லை. சற்றுமுன்தான் அவன் அழு குரல் கேட்டது. ஆனல் இந்த அறையின் சாவியைக் காணவில்லையே."

ராஜா அந்தப் பூட்டைப் பரிசோதித்துப் பார்த் தான். துவாரத்தின் வழியே உள்ளே பார்த்தான். "ஒரு கம்பி கிடைத்தால் எளிதில் வேலை முடிந்து விடும்" என்ருன். ஒரு விஞடி யோசித்தான். பிறகு அடிமேல் அடிவைத்து நாலைந்து அறைகளுக்கு அப் பால் உள்ள ஒரு அறையை அடைந்தான். அங்கே கூச்சல் போட்டுக் கத்திக்கொண்டிருந்த குழந்தைகளை

ஒரு ஸ்திரி திட்டிக்கொண்டிருந்தாள். கதவில் தொங்கிய சாவியை மெள்ள எடுத்துக்கொண்டு வந்தான். அந்த சாவி சரியாயிருந்தது.

“நெல்ஸார், நீ ஒரு மேதாவிதான்” என்ருள் மால்விஞ.

“இல்லை, இந்த வீட்டுக்காரன் ஒரு கஞ்சப் பயல். எல்லாப் பூட்டுக்கும் ஒரே மாதிரியான சாவியைச் செய்திருக்கிருன்” என்று சொல்லிக்கொண்டே, சாவியை இருந்த இடத்திலேயே கொண்டுபோய் வைத்துவிட்டு வந்தான்.

பெரிய மனிதர்களைப் போல் அவனுடைய கையைத் தட்டிக்கொண்டே சென்ருள் மால்விஞ: “நீ எப்போதும் இம்மாதிரி விரஸமாகவே பேசுகிருய். எங்கள் பகுதியில் அப்படியில்லை. வாரம் ஒரு முறை மாற்றிக்கொள்வோம்.”

ராஜா நெபுச்சநெஸாருக்கு அவள் சொன்னது விளங்கவேயில்லை. அவள் பெருமிதத்துடன் பிரபுத்வம் கொண்டாடி நடிக்கும்போது அவனுக்கு அது அர்த்தமாவதேயில்லை.

“ராணி —” என்று கதவைத் திறந்து அவளுக்கு வழிவிட்டான்.

இருவரும் ஒரு சின்ன அறைக்குள் நுழைந்தனர். அதற்கு ஒன்றரை ஜன்னல்கள் இருந்தன். அந்த மீதியான அரை ஜன்னல் அடுத்திருந்த சமையலறையில் இருந்தது. இடையில் ஒரு தடுப்பு வைத்து மறைந்திருந்தது. ஒரு மூலையில், கந்தல்கள் நிறைந்த ஒரு கட்டில் போடப்பட்டிருந்தது. அதன் அடியில் உள்ள இடத்தில் புட்டிகள் வைத்து நிறைக்கப்பட்டிருந்தது.

கால் ஒடிந்த மேஜை ஒன்று சுவரின்மேல் சார்த்தி வைக்கப்பட்டிருந்தது. ஜன்னலருகில் அழுக்குப் படிந்த ஒரு சிறு தொட்டில் தொங்கிக்கொண் டிருந்தது. அதில் ஆறு மாதத்துக் குழந்தை ஒன்று, வாயில் பழந் துணியை வைத்து உறிஞ்சிக்கொண்டு கிடந்தது.

இரண்டு அல்லது மூன்று வயது மதிக்கத்தகுந்த ஒரு பாலன், அறையிலிருந்த ஒரே நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். அவன் நாற்காலியுடன் சேர்த்து வைத்துக் கட்டப்பட்டிருந்தான். ஜன்னல் படியில், சில ரொட்டித் துண்டுகள் கடிபட்டுக் கிடந்தன. தூங்கிக்கொண்டிருந்த அவன் கண் விழித்து அவர்களை உற்று நோக்கினான்.

"அடே! பையா! பையா! உன்னுடைய அப்பாவையே உனக்கு அடையாளம் தெரியவில்லையாடா?" என்று நாடகமேடைப் பாணியில் கையை விரித்துக்கொண்டு கேட்டான்.

இருவரும் சேர்ந்து அவனுடைய கட்டுக்களை அவிழ்த்து விட்டனர். மால்வினா அவனைத் தன் கால்களில் போட்டுக்கொண்டு, துணியால் சுத்தம் செய்யத் தொடங்கினாள்.

அவர்களுடைய நடவடிக்கைகளில் யாதொரு அக்கரையும் காட்டாமல் குழந்தை உட்கார்ந்திருந்தது. சுறுசுறுப்பு இன்றி, மண்போல் உட்கார்ந்திருந்தான். வாழ்க்கை முழுவதுமே சலனமின்றி, அதன் சுகதுக்கங்களில் பற்றற்று ஞானியைப்போல் வாழ்ந்து போவது என்று அவன் அப்போதே தீர்மானித்துவிட்டதைப் போல் இருந்தது. அப்படியே கண்ணை மூடிக் குறட்டைவிடத் தொடங்கினான்.

"இவன் எவ்வளவு குண்டாய் இருக்கிறுன் பார்த்தையா, நெஸ்ஸார்?" என்றுள் மால்விஞ.

"அவன் வாயைத் திறந்து பேசுகிறுனே? எத்தனை வயது ஆகிறது என்று சொன்ஞய்?" என்றுன் நெபுச்சநெஸ்ஸார், எங்கோ பார்த்துக் கொண்டு.

"மூன்று வயது! – என்ன? அதற்குள்ளாக மறந்துவிட்டாயே?"

"ஒரு மனிதன் நினைவு வைத்துக்கொள்ள இதை விட முக்கியமான விஷயங்கள் பல இருக்கின்றன."

மூன்று வருஷங்கள் – அப்படியாஞல் – பேசுவதற்கு இன்னும் நிறைய அவகாசம் இருக்கிறது.

"போகட்டும், இவன் என்ன வேலைக்குப் போவான் சொல்!"

"இவஞ? மிட்டாய்த் தொழிலில் ஈடுபடுவான்!" அவளுக்குத் தித்திப்பில் பிரியம்.

நெபுச்சநெஸ்ஸார் பெரு மூச்சு விட்டுக்கொண்டு, "பெண்களுக்கு யோசனையே கிடையாது. கை வேலைகளின் காலம் மலையேறிவிட்டது. என்னைவிட கை வேலையில் சிறந்தவனை நீ கண்டிருக்கிறுயா? இப்பொழுது என் நிலைமை என்ன? மூளை வேண்டும். பையனுக்குத் தலை பெரிதாக இருக்கிறது! கடவுள் இருக்கிறுர்!" என்றுன்.

ராஜா நெபுச்சநெஸார் குழந்தையின் தலையை இரு கைகளிலும் பற்றிஞன். "பையா, அங்கே யந்திரம் வேலை செய்கிறதா?" என்றுன் சிரித்துக் கொண்டே. பையனுடைய வருங்காலத்தைப் பற்றி நினைத்தான். அவன் கைகள் நடுங்கின.

" இவன் வாயைத் திறக்கமாட்டேன் என்கிருனே? கண்ணைக்கூட இமைக்கவில்லையே. இவனுக்கு முது கெலும்பு பலமாக இருக்கிறது. இவன் மண்டைக்குள் என்ன நடக்கிறது என்பது எனக்குத் தெரியும். மால்வினு! எவ்வளவு நிதானமாக அமைதியாக இருக் கிருன் பார். இவன் சிறுவனுக இருந்தாலும் வருங் காலத்தில் பெரும் செயல்கள் புரிவான். இவனுல் முடியாதது ஒன்றுமிராது!"

நெபுச்சநெஸ்ஸார் கனவு கண்டுகொண்டே, சீட்டி யடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். வருங்கா லத்தில் அவனுடைய வாழ்க்கை இன்னும் விரிந்து வெற்றிப் பாதையில் செல்வதாகத் தோன்றியது. அவன் வாழ்க்கைப் போட்டியில் பல தடவை கெலித் திருக்கிருன்; ஆயினும் வெற்றியின் ஆனந்தத்தை அவன் அனுபவிக்கவில்லை. ஆனுல் பையன் வளர்ந்து பெரியவனுகும்போது நிலைமை மாறிவிடும்.

கொஞ்சம் கொஞ்சமாக அவனுடைய சிந்தனைகள் வருங்காலக் கனவுகளிலிருந்து திரும்பி மீண்டும் இந்தப் பூவுலகத்துக்கு வந்தன. அப்போதுதான் தன்னுடைய தொண்டை வறண்டிருப்பதை உணர்ந் தான். உடனே அறையைச் சுற்றித் தன் பார்வை யைச் செலுத்தித் துழாவினுன். "நம்முடைய ஒயின் கிடங்கு எப்படியிருக்கிறது?" என்று சொல்லிக் கொண்டே, படுக்கைக்கு அடியிலிருந்து பல புட்டிகளை வெளியே இழுத்துப் பார்த்தான். "பாலைவனமாய் வறண்டிருக்கிறது! என்ன அவமானம்! இதைப் பார், உன்னுடைய ச்கோதரிக்கு எங்கோ பக்கத்தில் பத்து வரவு இருக்கிறதல்லவா?"

மால்விஞ இல்லையென்று தலையை அசைத்து மீண்டும் குழந்தையின் மூக்கைத் துடைப்பதில் ஈடுபட்டாள்.

"நல்ல வேடிக்கை. குடும்பம் நடத்துகிருர்கள்! அவனுக்கு வாரத்துக்கு 16 கிரௌன் சம்பாத்தியம், அத்தனையும் செலவு செய்து வருகிருன். எங்கேயாவது கணக்கு இருக்கத்தானே வேண்டும்" பிறகு பையன் பக்கம் திரும்பிஞன். "எலே, 'அப்பா' சொல்லு! எங்கே, இப்படிப் பார். அடே, நம் இரண்டு பேர் சாயலும் அவனிடம் இருக்கிறது பார். எல்லாவற்றிலும் மனம் ஒத்துப் போவதின் விளைவு இது!"

திரும்பி சமையலறைக்குள் நுழைந்தான்.

"தண்ணீர் நிறைய வைத்திருக்கிருர்கள், புண்ணியவான்கள்!"

பிறகு மால்விஞவும் குழந்தையும் இருந்த இடத்துக்கு வந்தான்.

"மாலி! நீ எவ்வளவு அழகாய் இருக்கிருய், தெரியுமோ! அந்தக் குழந்தையை மடியில் போட்டுக் கொண்டு நீ உட்கார்ந்திருக்கும் காட்சியை நீயே பார்த்தால்தான் தெரியும்!"

மால்விஞ முகத்தைக் கோணிக் கொண்டாள்.

"எப்போதும் என் உறவினரைக் குறைகூறுவது தான் உனக்கு வழக்கம். அவர்கள் இல்லாவிட்டால் இந்தக் குழந்தையை யார் கவனிப்பார்கள்!"

"ஆமாம், ஆமாம். அவர்களுடைய அபிப்பிராயப்படி அவர்கள் நன்மையைத்தான் செய்து வருகிருர்கள். அதற்காக இவ்வளவு துக்கப்படாதே" என்று சொல்லிக்கொண்டு குழந்தைக்கு ஏதாவது

கொடுக்கவேண்டும் என்று பையைத் தடவினன். அவன் கையில் கிடைத்ததெல்லாம் புகையிலைக் கத்தை தான்! வெட்கக் கேடு! அந்தப் பணத்துக்கு ஐஸ்கிரீமாவது வாங்கி வந்திருக்கலாம். மீண்டும் சமையலறையை அடைந்து கடைசி ஆசையுடன் தேடத் தொடங்கினன்.

திடீரென்று சந்தோஷத்துடன் சீட்டியடித்தான். எங்கோ ஒரு மூலையிலிருந்து பத்து ஓர் நாணயம் அகப்பட்டுவிட்டது.

அப்படியே குதி போட்டுக்கொண்டு மால்வினுவுக்கு எதிரில் வந்து நின்ருன்.

"கண்மணி மால்வினு! ஓடிப்போய் நம் இராஜ குமாரனுக்கு ஐந்து ஒருக்கு கிரீம் வாங்கிவா. பாக்கி பணத்துக்கு பிராந்தி. அது ஒரு நோயாளிக்கு என்று சொன்னல் கடைக்காரன் கூடவே அளந்து கொடுப்பான்."

யாராயிருந்தாலும் அந்த மொத்தப் பணத்துக்கும் பிராந்தி வாங்காமலிருக்க முடியாது. ஏனெனில், அந்த நேரத்தில் கிரீம் புளித்துப் போயிருக்கும்; அதுவும் கிடைப்பது அருமை. அன்றியும், பத்து ஒருக்குக் குறைந்து பிராந்தியும் கிடைக்காது. இவ்வளவு திருப்திகரமான காரணங்களைக் கேட்ட பிற்பாடும் ராஜா நெபுச்சநெஸ்ஸார் கோபித்துக் கொள்ளக்கூடிய மனிதன் அல்ல; பிள்ளையாண்டானும் சில துளிகள் பிராந்தியை ரஸிக்கக்கூடிய ஆண் மகன்தான்.

அதைக் குடித்தவுடன் குடும்ப வாழ்க்கையின் அமைதி மறைந்து விட்டதைப்போல் தோன்றியது. அடிக்கடி அவன் ஜன்னலண்டை போய் நின்று

வெளியில் நோக்கினன். அவனுடைய பழைய ஆவேசம் மீண்டும் ரத்தத்தில் ஊறிவிட்டதைப் போல் இருந்தது. உலகத்தில் இன்னும் ஒருமுறை சுற்ற வேண்டும் என்று நினைத்தான்.

அசாதாரணமாக அன்று வெளியுலகு அழகாயிருந்தது. நகரத்தின் மேற்பரப்பை ஊடுருவிக் கொண்டு சூரியன் பிரகாசித்துக் கொண்டிருந்தான். மரங்களுக்கிடையே தெரிந்த நீலவானம், எல்லையற்றதாய், தெளிவும் அமைதியும் நிறைந்த அஸ்திவாரத்தின்மேல், பற்றற்ற பரந்த வெளியாய்க் காட்சியளித்தது. அநாதியான காலத்தினூடே பார்ப்பதைப் போன்றிருந்தது.

ராஜா செபுச்சநெஸார் உடலைக் குலுக்கிக்கொண்டான்.

" இன்று வீண்பொழுதாகப் போகக்கூடாது. பையனும் தூங்குகிறான். வெளியில் போய் நல்ல காற்றை சுவாசிக்க வேண்டும் – கையில் கொஞ்சம் துட்டு இருந்தால்? "

பெருமூச்சுடன் அறையைச் சுற்றிப் பார்த்தான்.

" இந்த அநாதை விடுதி உடையுடன் நீ வெளியில் போக முடியுமா? " என்றாள் மால்வினா.

" வாஸ்தவம்தான். இங்கே வேறு ஆடை கிடைக்காமல் போய்விடுமா? "

இருவரும் படுக்கையைத் தேடினார்கள். கிழிந்த கால் சட்டையும், ஒரு மாஜிக் கோட்டும் அகப்பட்டன. நெபுச்சநெஸ்ஸார் கம்பீரமாக அந்த ஆடைகளை எடுத்து அணிந்து கொண்டான். அநாதை ஆடைகளை விசிறி எறிந்தான்.

"உன் முதுகுப்புறம் இரண்டு தையல் போட்டு விட்டால், இது ஷோக்காகப் போய்விடும்" என்ருள் மால்வினு அவனைத் தட்டிக்கொண்டே.

"அதுசரி. இந்த மேஜோட்டைப் பார்த்தால் தான் கல்லைவிட்டு எறிவார்கள்."

"கால் நிஜாரைத் தழையவிட்டு அதை மூடிக் கொள்ளவேண்டும்."

"அதற்கு நீளம் ஏது? பரவாயில்லை. மேஜோடு இல்லாமலே, மர்க்கட்டைச் செருப்பை மாட்டிக் கொண்டு வருகிறேன்."

"அப்படி நீ வந்தால் உன்னுடன் நான் வெளிக் கிளம்பமாட்டேன். எனக்குக் கூடப் போவதற்கு இன்னும் எத்தனையோ பேர் இருக்கிருர்கள்."

"அடேடே, நான் நிஜமாக அப்படிச் சொன்னேனு? நம்முடைய நிலைமை இன்னும் அவ்வளவு மோசமாய்விடவில்லை." அவன் ஜம்பமாகப் பேசிய போதிலும், சிறிது சந்தேகத்துடன்தான் நின்ருன்.

"மச்சுப்படியில் தேடிப் பார்க்கலாமே" என்ருள் மால்வினு.

"நானும் அதைத்தான் நினைத்தேன்" என்று நிதானமாகச் சொல்லிவிட்டு வெளியில் போனுன். சற்று நேரத்தில் கையில் பழைய பட்டுத் தொப்பி யையும் ஒரு ஜதை கிழிந்த ஜோடுகளையும் எடுத்துக் கொண்டு திரும்பி வந்தான்.

அந்த ஆடைகள் கசங்கிய பழங் காகிதத்தைப் போல் காட்சி யளித்தன. ஆனல் தம்பதிகள் அவை களில் காணப்பட்ட துவாரங்களில் மட்டும்தான் கவனம் செலுத்தினர். மால்வினு ஊசி நூலைத் தேடு

வதில் முனைந்தாள். தொட்டிலிலிருந்த சிசு இப்போது கத்தத் தொடங்கியது. மால்வினுவின் சகோதரி வரும் நேரமாகிவிட்டது என்பதை அவர்கள் உடனே அறிந்தார்கள். தங்கள் பையனைத் தட்டிக் கொடுத்து, பழையபடியே நாற்காலியில் வைத்துக் கட்டிப் போட்டனர். பையன் தூங்கத் தொடங்கினுன்.

சிசு சமாதான மடையவில்லை. அதன் வாயில் இருந்த துணி நழுவிவிட்டது. தன் இளம் வயிறைத் தூக்கி வளைத்துக்கொண்டு, அது கத்தத் தொடங்கியது.

"அதற்குப் பசி. அதன் வயிற்றைப் பார், வில்லாக வளைகிறது" என்ருன் ராஜா நெபுச்சநெஸ்ஸார்.

மால்வினு சிறு ரொட்டித் துணுக்குகளைப் பொறுக்கி, துணி முனையில் கட்டி அதன் வாயில் வைத்தாள். குழந்தை அழுகையை நிறுத்திவிட்டுத் தூங்கத் தொடங்கியது.

அவர்கள் இருவரும் தெருவில் இறங்கி நடக்கத் தொடங்கினர். மால்வினு தன்னுடைய நெஸ்ஸாரோடு கைகோர்த்துக்கொண்டுநடந்தாள். "நம்மை கௌரவமான இடத்துக்கு அழைத்துக்கொண்டு போவாய் அல்லவா?" அவளுடைய குரலில் தொனித்த நம்பிக்கையைக் கண்டு ராஜா நெபுச்சநெஸ்ஸார் தன்னுடைய ஏழைமையைப் பன்மடங்கு அதிகமாக உணர்ந்தான்.

எந்த இடத்துக்குப் போவது என்பனபோன்ற சில்லரை விஷயங்களை அவனுடைய பொறுப்பில்விட்டுவிட்டாள். சிற்சில சமயங்களில் தன் பார்வையை அவன் பக்கம் செலுத்தினுள்; மற்றப்படி, மரியாதை

யுடன் தலையைக் குனிந்தபடியேதான் போனாள். அவள் இப்படி ஒரு ஆண்பிள்ளையுடன் சென்று வெகுகாலம் ஆகிறது. அதனால், அப்போதுதான், முதன்முதலாக வெளியில் உல்லாசமாகப் போகும் இளம் பெண்ணைப் போல் நாணம் தோன்றியது; அந்த உணர்ச்சி இன்ப கரமாயிருந்தது.

"நம்மை எங்கே அழைத்துப் போகப்போகிறாய் என்று தெரியும்" என்றாள் உற்சாகமாக. ஆனாலும் அவளுக்கு அது தெரியாது; தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலும் இல்லை. அவனிடம் உள்ள ஆழ்ந்த நம்பிக்கையைக் காட்டவேதான் அப்படிச் சொன்னாள். அப்படியே அவனுடைய கையைப் பற்றிக்கொண்டு கண்களை மூடிக்கொண்டே ஒளிப்பிரவாகத்தின் எதிரே அவள் போக விரும்பினாள். அதன் பிறகு, அங்கே போனதும், கண்ணைத் திறந்து, கண்ணைக் குருடாக்கும் அந்த ஒளி வெள்ளத்தில் மூழ்கித் திளைக்க வேண்டித் துடித்தாள்.

ஆஹா! வாழ்க்கை எவ்வளவு ரஸமாயிருக்கும்!

ராஜா நெடுச்சநெஸ்ஸாருக்குச் சிறிது சங்கடமாயிருந்தது. நகரத்தின் நெருக்கடியான பாகத்தையடைந்ததும் திரும்பினான். பிறகு மறுபடியும் திரும்பினான். போவதற்கு இடமா இல்லை. இன்பமும் அழகும் நிறைந்த நகரம் முழுவதும் அவர்களுக்காகக் காத்திருந்தது. எந்த இடத்துக்குப் போவது என்பது தான் பிரச்னை. பின்னடி ஏன் வந்தோம் என்று நினைக்கலாமல்லவா? அவனுக்கு இஷ்டம் இருந்தால் நகரம் முழுவதையுமே ஒரு கோடியிலிருந்து மறுகோடி வரையில் ஒரு சுற்றுச் சுற்றியிருப்பான். ஆனால் கூட

ஒரு பெண்பிள்ளை இருப்பதால் அது முடியாத காரியம். மனத்தில் ஒரு கற்பனை தோன்றவேண்டும் என்று அவன் எதிர்பார்த்தான். அதுவரையில் நடந்துகொண்டிருக்கவேண்டியதுதானே.

மால்வினு கவனிக்கத் தொடங்கிவிட்டாள். "நாம் சுற்றிச் சுற்றி வந்தவழியே போகிறோம்" என்றாள்.

"முதல் வேலை ஊசி நூலை சம்பாதிப்பதுதானே!" என்றான் சற்றுக் கோபமாக.

அவனுடைய கோபத்தைக் கண்டு வியப்படைந்த மால்வினு, அவன் கையைப் பற்றிக்கொண்டே ஒன்றும் தெரியாமல் நிமிர்ந்து பார்த்தாள். ராஜா நெபுச்சநெஸ்ஸார் உடனே தன் தவறை உணர்ந்துகொண்டான். உல்லாசமாக அவனுடன் பொழுதைக் கழிக்கவேண்டும் என்றுதானே அவள் வந்தாள்! அவனிடத்தில் ஒரு செப்பாலடித்த காசுகூட இல்லை யென்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் அவனை ஒரு ஆண் பிள்ளையாக நம்பித்தானே அவள் புறப்பட்டாள்? அவள் நம்பியதும் நியாயம்தான். சாதாரணமாக இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் நெபுச்சநெஸ்ஸாரின் மூளை அதிசயமாக வேலை செய்யும்; ஒரு பிரச்னைக்கு ஆயிரம் வழிகள் தோன்றும். இன்று ஏனோ அவனுடைய சாதுர்யம் அவனைக் கைவிட்டு விட்டது. இதற்கு முன்னால், எத்தனையோ சந்தர்ப்பங்களில் அவனுக்கு வேண்டிய பணத்தைத் தேடித் தந்திருக்கும் அவனுடைய மூளை அன்று வேலைசெய்ய முன்வரவில்லை.

"நாம் டிக்கன்டர் ஹோட்டலில் போய் நடனம் ஆடலாம்; ஆனால் அவர்கள் நம்மை உள்ளே விட மாட்டார்களே" என்றான், சோர்வுடன்.

அவர்கள் சுற்றிக்கொண்டே போய் பழைய கோட்டைக்குப் பக்கத்தில் ஒரு பெஞ்சியில் உட்கார்ந்தனர். சூரியன் அஸ்தமித்துக்கொண்டிருந்தது. ஊதா நிறமான மூடுபனி நகரத்தைச் சூழ்ந்து போர்த்திக் கொள்வதைப்போல் இருந்தது. அந்தக் கோட்டையைச் சூழ்ந்திருந்த மரங்களினூடே பாய்ந்திருந்த மூடுபனி, இன்பக் கேளிக்கையில் மூழ்கிய நகரத்தின் ஆசை நிறைந்த பெருமூச்சைப்போல் இருந்தது.

சற்று தூரத்தில் குழந்தைகள் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் இருந்தனர். தெருக்கோடியில் நின்ற மாதா கோயில் பொன்முலாம் பூசப்பட்டதைப்போல் மின்னியது. இந்த இன்பகரமான சூழ் நிலையில், சோர்வுற்றிருப்பது யாருக்கும் எளிதன்று. அவர்களும் தங்கள் துயரங்களை மறந்து எதை எதையோபற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். மிகப் பெரிய மனிதர்கள் விடைபெற்றுச் செல்வதைப்போல் மறையும் சூரியனை அவர்கள் சிறிது வருத்தத்துடனேயே நோக்கினர். அது மறையுமுன் அவர்களுடைய ஒளியற்ற முகத்தைத் தழுவி முத்தமிட்டுச் சென்றது; அவர்கள் முகம் சிவந்து, போதை கலந்த ஆவலால் நிறைந்து துடித்தது. அவர்கள் கண்விழிகள் புதிய பிரகாசமடைந்தன; தூரத்திலே நகரத்தின் உற்சாகம் பொங்கி வழிந்தது. சிறிது காலத்திற்கு அளவிடற்கரிய மகிழ்ச்சி—உலகமே அறிந்திராத பேரானந்தம்—தோன்றி வற்றிச் சுருங்கியிருந்த அவர்கள் இருதயங்களை நிறைத்தது.

மால்வினா மிகுந்த சிரமத்துடன் ஒரு பெண் குழந்தையை வீட்டில் போய் ஊசி நூல் கொண்டுவரச் சொன்னாள். பரபரப்புடன் தன்னுடைய பெரிய

அழகிய ஆண்மகனை அழகு செய்தாள். திறந்த வாயுடன் ஒரு பட்டாளம் குழந்தைகள் சூழ்ந்து நின்று வேடிக்கை பார்த்தன. வேலை துரிதமாக நடப்பதற்காக ராஜா நெடுச்சநெஸ்ஸார் பெஞ்சியில் படுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. அடிக்கடி புரண்டு கொடுக்கவும் வேண்டியிருந்தது. கண் இமைக்கும் நேரத்தில் மால்வினு தன் வேலையை முடித்து விட்டாள்.

"இப்போ பார்" என்றுள் ஆனந்தத்துடன். அவர்களுடைய உல்லாசத்திற்குக் குறுக்கே நின்ற கடைசித் தடையும் முறிந்துவிட்டது.

அவன் செயலற்று விழித்தான். ஒவ்வொன்ருகத் தடைகள் நீங்கிவிட்டன. இனி என்ன சால்ஜாப்பு இருக்கிறது. அவனுடைய புத்திசாதுர்யம் அவனைக் கைவிட்டதும் எவ்வளவு தரித்தரனுகிவிட்டான்!

அவனுடைய வாழ்க்கை முழுவதும் அவன் தன்னிடம் நம்பிக்கை இழந்ததில்லை. இன்றுவரையில் அவனிடம் அது நிலைத்து இருந்திருக்கிறது. அதனுலேயே தன்னுடைய யௌவன வாழ்க்கையை நினைப்பூட்டிக்கொள்வதற்காக இன்று வெளிக் கிளம்பினுன். ஒரு சிறு உலகயாத்திரை செய்துவிட வேண்டுமென்று. கையில் ஒரு காசின்றி மூன்று கண்டங்களில் சௌக்கியமாகச் சுற்றியிருக்கும் அவனுக்கு இது மிக அற்பமானதுதான். இன்று, ஒரு நடனக் கச்சேரிக்காக ஐம்பது காசுகூடச் சம்பாதிக்க முடியாமல் இப்படி உட்கார்ந்திருப்பது எவ்வளவு கேவலம்!

இருந்தாலும், பணம் இல்லாமலும் ஏதாவது செய்யமுடியும். மிக்க ஏழையாயிருந்தாலும் எவராவது

தெரிந்தவர்கள் இராமலா போய்விடும்? மால்வினு கூட ஜாடையாகக் குறிப்பிட்டாள். ஆனால் ராஜா நெபுச்ச நெஸார் அந்தமாதிரித் தன் நண்பர்களுக்குச் சுமையாக இருக்க விரும்பமாட்டான். தன்னுடைய பால்யகால வேட்டை பூமியை மீண்டும் பார்வை யிடவே அவன் விரும்பினுன். இங்குமங்கும் கிடைக் கும் துண்டு துணுக்குகளைப் பொறுக்க அவன் விரும்ப வில்லை. அது அவன் வழக்கமில்லை.

மால்வினு அவனிடம், நெருங்கி ஒட்டிக் கொண்டாள். இந்த உலகத்தில் அவனைத் தவிர வேறு யாரும் தனக்கு வேண்டியதில்லை என்று தெரிவித்தாள். அவன் இல்லாத சமயத்தில் அவள் வேறு யாரையும் தேடிப்போக முடியும்.

"நீ அப்படிச் சொல்லுவாய் என்று தெரியும். நானும் உன்னைப் போலவேதான் சொல்லியிருப்பேன்" என்ருன், உணர்ச்சியுடன்.

மால்வினு அவனுடைய வார்த்தைகளைக் கம்பீர மாக ஏற்றுக்கொண்டாள். ஆனுல் திடீரென்று அழத் தொடங்கினுள். சின்னப் பெண்ணைப்போல் கண்ணீர் பெருக்கினுள். இப்போதுதான் முதன் முதலில் வாழ்க்கையில் ஏமாற்றமடைந்த பெண்ணைப்போல் கதறத் தொடங்கினுள். ராஜா நெபுச்சநெஸ்ஸார் வார்த்தைகளினுல் அவளைச் சமாதானப் படுத்தவில்லை; பரிவுடன் அவள் இடையைச் சுற்றி அணைத்துக் கொண்டான். அவனுடைய தோளின்மேல் தலையைப் புதைத்துக்கொண்டு விசுத்துக்கொண்டே தூக்கத்தில் ஆழ்ந்தாள் மால்வினு.

அஸ்தமனம் ஆகிவிட்டது. மரங்களுக்கிடையே

இருள் சூழ்ந்தது. தெரு விளக்குகள் ஒவ்வொன்றாக ஏற்றப்பட்டு மின்னத் தொடங்கின. ராஜா நெபுச்சு நெஸ்ஸார் எங்கோ அகன்ற திசை வெளியை நோக்கிக்கொண்டிருந்தான்.

தூரத்திலே, கண்ணுக்கு எட்டாத தூரத்திலே அவன் உற்று நோக்கிக்கொண்டிருந்தான். மால்வினவை எழுப்ப அவனுக்கு மனமில்லை. இந்த உலகத்தில் அவன் தன்னந்தனியாக இருப்பதை உணர்ந்தான். எல்லாம் நடக்கிறபடி நடக்கட்டும் என்று சும்மா இருந்தான்; அவனுடைய செயலில் ஒன்றுமில்லை; அவனுக்கு எல்லாம் ஆகிவிட்டது. அவன் கிழவனாகி விட்டான். அதை ஒப்புக்கொள்வதில் ஒரு மனச் சாந்தி ஏற்பட்டது; இல்லாத முடியாத வேலைகளில் முயற்சி செய்து தோல்வியடைவதில் என்ன லாபம்? ஓடிக்கொண்டே யிருக்கும் வாழ்க்கை வண்டியில் இனித் தாவி ஏறமுடியாது; மண்டைதான் உடையும்.

ஆனால் அவனுடைய நாளில் அவன் எவ்வளவு அனுபவித்து விட்டான்! எத்தனை இன்பகரமான நினைவுகள்! தன்னுடைய பழைய நினைவுக் கும்பலில் மூழ்கித் திளைக்க அவன் ஒரு துணையை நாடினான். மால்வினா எழுந்ததும், அவளுடைய சூன்யம் நிறைந்த பார்வையைக் கண்டதும் அவனுடைய மகிழ்ச்சி யெல்லாம் மறைந்தது.

அவர்கள் அப்படியே மௌனமாக உட்கார்ந்திருந்தனர். பக்கத்தில் இருந்த புதர்களிடையே சிறு பாதைகள் தென்பட்டன. சுற்றியுள்ள அகழியில் ஜலம் சலசலக்கும் சத்தம் கேட்டது.

இந்தச் சூழ்நிலையினால் தாக்குண்ட ராஜா நெபுச்சு

நெஸ்ஸாரின் இதயத்திலே பழைய ஆசை ஒன்று எழுந்தது. திறந்த வெளியிலே இரவைக் கழிப்பது எவ்வளவு ஆனந்தம்! இன்னும் அதற்குச் சக்தியிருக்கிறது. வெட்டவெளியிலே, பிரபஞ்சத்தின் மத்தியிலே, நட்சத்திரக் கூட்டத்தினுல் போர்த்தப்பட்டுத் தூங்குவதைவிட வேறு இன்பம் ஏது? நிச்சயமாக அவன் இன்று அப்படித்தான் செய்யப் போகிருன்.

ஆனுல் அதைக் கேட்ட மால்வினு ஆத்திரமடைந்தாள். பிச்சைக்காரியைப்போல் அவள் தரையில் படுத்துறங்கப் போவதில்லை. அவளுடைய ஜில்லாவில் அது வழக்கமில்லை. "இவ்வளவு கேவலமாக நடந்து கொண்டாயானுல் நான் நிச்சயம் போய்விடுவேன்."

"ஏது ரொம்ப பெரியமனுஷ வேஷம் போடுகிருயே இன்று? யாரோ புதிதாக உன்மேல் கண்போட்டிருக்கிருன் என்று நினைக்கிறேன்" என்ருன், அருவருப்புடன்.

"நெஸ்ஸார், இப்படிப் பேச வெட்கமாயில்லை? நான் வேஷம் போடுகிற ஜாதியில்லை என்று உனக்குத் தெரியும்" என்ருள் கோபமாக.

அவனும் இப்போது தன் லட்சியத்தைத் தாழ்த்திக்கொண்டு விட்டான். அப்போதுதான் ஜென்ஸனுடைய வைக்கோல் கொட்டகை அவனுக்கு ஞாபகம் வந்தது. அவனுக்குக் களைப்பாயிருந்தது; அமைதியான ஓய்வை நாடினுன்; வைக்கோல் கொட்டகையைவிடச் சுகமான இடம் அவனுக்குக் கிடைக்குமா?

சந்தேகத்துடன்தான் இந்த ஏற்பாட்டைச் சொன்னுன். அவன் எண்ணியதற்கு மாருக அவள் ஆட்சேபிக்கவில்லை; மௌனமாக எழுந்தாள். சிறிது நேரம்

அவர்கள் தெற்கு நோக்கி நடந்தார்கள். பிறகு ஒரு பொட்டல் வெளியைக் கடந்தார்கள். வேலியைக் கடந்து ஒரு தோட்டத்தை யடைந்தனர். ஒரு தாழ்ந்த கட்டிடத்தை அடைந்தனர். அதற்குள்ளிருந்து குதிரைகள் கனைக்கும் சத்தம் கேட்டது.

ராஜா நெபுச்சநெஸார் மெதுவாக எட்டிப் பார்த்து குஷியாகச் சீட்டியடித்தான். அவனுடைய நடையில் யௌவனத்தின் உற்சாகம் தென்பட்டது. மெதுவாகக் கதவைத் திறந்துகொண்டே மால்வினுவுக்குக் கண்ணால் ஜாடை செய்தான். அடிமேல் அடி வைத்து லாயத்திற்குள் நுழைந்தான்; மால்வினு பின் தொடர்ந்தாள்.

"இதோ ஹோட்டல். மால்வினு, பார்! குதிரைகள், ஆனந்தமான வைக்கோல். நல்ல ஜாதிக் குதிரைரைகள். எருவின் வாசனையைப் பார்த்தாயா! ராணி, வைக்கோல்மேல் ஏறிக்கொள்" என்றான் ரகசியமாக.

அவன் பரண்மேல் ஏறினான். மால்வினுவும் பின் தொடர்ந்தாள். அவளுக்கு அது சிரமமாகத்தான் இருந்தது. நெஸ்ஸாருடைய கேலி வார்த்தைகளில் தனக்குள்ள வெறுப்பைக் காட்டுவதற்காகத் தன் உடைகளை இருகப் பிடித்துக் கொண்டாள்.

அன்றிரவு ராஜா நெபுச்சநெஸ்ஸார் பெரிய பரந்த வெளிகளையும் நட்சத்திரம் பதித்த வான மண்டலங்களையும் பற்றிக் கனவு கண்டான். மறு நாளைக்கு நடப்பதற்காக பாதங்களைத் தடவித் தயார் செய்து கொண்டான். இன்று வனப்பு மிக்க வைக்கோலின் மேல் அவன் அமர்ந்திருந்தான். அவனுக்கு எதிரில், தூரத்தில், மலைகள் நின்றன. அவைகளுக்கு அப்பால்

உள்ளவற்றைப்பற்றி அவன் கனவு கண்டுகொண்டிருந்தான். தலைக்கு மேலே, பிரபஞ்சம் நித்தியமான இன்னிசையுடன் சுழன்றுகொண்டிருந்தது. பரந்த இரவின் அழிவில்லாத இனிய கீதத்தை அவன் உணர்ந்தான். உடனே அவன் தன்னந்தனியாக விடப்பட்டதை உணர்ந்தான். ஆனால் இன்று அவன் மனத்தில் துயரம் இல்லை.

மால்வினாவும் கனவு கண்டாள். "டிக்கன்டர்" ஹோட்டலில் இருப்பதாகக் கனவு கண்டாள். "கொண்டை வைத்த பெட்டை" என்ற உன்னத நடனத்தை ஆடிக்கொண்டிருந்தாள். அவள் தன் உடையை ஒரு பக்கமாக நடனத்துக்காகத் தூக்கினாள். அவளுடைய உடல் முழுவதும் அலங்காரமான மஞ்சள் பட்டை அணிந்திருந்தாள்.

விடுதி அதிகாரி பீட்டர்ஸன் தன்னுடைய பட்டாளத்துடன் திரும்பியதும் ராஜா நெபுச்சநெஸ்ஸார் இன்னும் வரவில்லை என்று அறிந்ததும் ஆச்சரியப்பட்டான். ஆனால் இந்த மாதிரி அனாதைகள் இரண்டொரு நாள் காணாமலிருந்து தாமாகவே திரும்பிவருவதும் சகஜமானபடியால் அதைப்பற்றி யாரும் கவலைப்படவில்லை.

அதிகாரிகள் வழக்கம்போல் நெஸ்ஸாரைத் தேட முயற்சித்தனர். அப்போது மால்வினாவும் அவனுடன் சேர்ந்து மறைந்து விட்டது தெரிந்தது. அவர்களிருவருக்கு மிடையே உள்ள உறவு தெரிந்திருந்தபடியால் தீவிரமாகத் தேடத் தலைப்பட்டனர்.

அவனுடைய ஆடைமட்டும் கிடைத்தது. உடனே போலீசுக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. பழைய

கோட்டை வரையில் துப்புக் கிடைத்தது. அதன் பிறகு எங்கே போனுர்கள் என்று தெரியவில்லை.

வரவர அவர்கள் மறைவின் பயங்கரம் மாறி சிருங்காரமாகத் தோற்றத் தொடங்கியது. அழகான வசந்தகால இரவு; இன்பம் நிறைந்த காற்று. அந்தக் காதல் நாடகத்துக்கு அதிக விளம்பரம் கிடைத்தது.

விடியற்காலையில் அந்த வட்டாரத்தை நன்ருக அறிந்த ஒரு போலிஸ்காரன் துப்புத்துலக்கத் தொடங்கினுன். பொழுது விடிந்து சிறிது நேரத்திற்குப் பின் சூரிய ஒளி நெஸ்ஸாரைத் தட்டி எழுப்பிற்று. அவன் கண்ணைத் திறந்ததும் என்ன கண்டான்! ஒரு செந்தலைப் போலிஸ்காரன்! ஆனுல் அவன் பயப்படவில்லை. இதைப்போல் எத்தனையோ அனுபவங்கள் அவனுக்கு ஏற்பட்டிருக்கின்றன. நிதானமாகக் கொட்டாவி விட்டுக்கொண்டே - தன்னைச் சுற்றியிருந்த மால்வினுவின் கைகளிலிருந்து விடுவித்துக்கொண்டு-கேட்டான்: "என்ன, போகவேண்டியதுதானு?"

சார்ஜன்ட் தலையை அசைத்தான்.

"நாங்களாகவே வந்திருப்போம்; ஆனுலும் எங்களைத் தேடி ஆள் வருவதிலும் சுகம் இருக்கிறது. வண்டி இருக்கிறதோ இல்லையோ?

"வெளியில் காத்திருக்கிறது" என்ருன் சார்ஜன்ட் சிரித்துக்கொண்டே.

வெளியில் போனதும் மூவரும் வண்டியில் ஏறிக்கொண்டனர். மால்வினு, நெஸ்ஸார் இருவருக்கும் ஆனந்தம். முன் பக்கத்தில் அமர்ந்து ஷோக்காக சாய்ந்துகொண்டிருந்தனர். அவர்கள் இரவு விருந்திற்குப் பின் வீடு திரும்புகின்றனர், சிறிது மயக்கத்

துடன், இரவின் ஒளியும், இசையும் இன்னும் அவர்க ளுடைய உடலிலே தேங்கி, ஊக்கி, உற்சாகப் படுத்திக் கொண்டிருந்தன. ராஜா நெபுச்சநெஸ்ஸார் பெருந் தன்மையுடன், வழியில் போவோருக்குக் கையமர்த்திக் கொண்டிருந்தான். மால்வினு காற்றில் முத்தங்களை வாரி யிறைத்துக்கொண்டு போனுள். பிறகு இருவரும் சிரித்தனர். போலீஸ்காரன் ஒன்றையும் கவனியாத வன்போல் உட்கார்ந்திருந்தான்.

அனுதை விடுதியின் முன் போய் வண்டி நின்ற தும், "சரியான முடிவு" என்றுன் ராஜா நெபுச்ச நெஸ்ஸார்.

மால்வினு வாய்திறக்கவில்லை. ஆனுல் கம்பீரமாக இரு விரல்களை உதட்டின்மேல் வைத்து, உடலை வளைத்து மரியாதை செய்தாள். ராஜா நெபுச்சநெஸ் ஸார் அதை உள்ளபடியே ஏற்றுக் கொண்டான். "கூட வந்து பொழுது போக்கியதற்கு வந்தனம்" என்று செல்வர்கள் பாஷையில் அதற்கு அர்த்தம். தன்னுடைய பழைய தொப்பியைத் தூக்கி ஸ்ரீமதிக்குப் பெருமை யுடன் மரியாதை செய்துவிட்டு ராஜ நடைபோட்டுத் தன் சிறைச் சாலைக்குள் நடந்தான்.

அதுவே அவர்களது கடைசிக் கேளிக்கையாக முடிந்து விட்டது. இரவில் போனதால் மால்வினுவைக் கடும் குளிர் பற்றிக் கொண்டது. சில நாட்களில் அவள் இறந்தாள். அதன் பிறகு ராஜா நெபுச்ச நெஸாருக்குத் தனியாக இந்த உலகுடன் போட்டி யிடத் துணிவு பிறக்கவில்லை. தோல்விக்கு அஞ்சி, தன் கடந்த கால வெற்றி வாழ்க்கையின் நினைவிலேயே மீதிப் பொழுதைக் கழித்தான்.

அதிசய அதிதி

பெரிய நகரத்தில் கூச்சலுக்கும் இரைச்சலுக்கும் இடையே வசிப்பவர்கள் நாட்டுப்புறத்தைப் பற்றி நினைக்கிறபோது, அங்கே பொழுது மிக மெதுவாக, ஒவ்வொரு விநாடியும் ஒவ்வொரு யுகமாக அசைந்து அசைந்து கழிகிறதென்று கற்பனை செய்து கொள்வது வழக்கம். ஆனால் உண்மை இதற்கு முற்றிலும் மாறானது. ஒவ்வொரு நாளும் ஒரே மாதிரியாகக் கழிவதால் பொழுதுபோவது தெரியாமல், வாரங்கள், மாதங்கள், வருஷங்கள் நம்மை யறியாமலே நழுவி விடுகின்றன.

அர்னுல்ட் ஹௌஜர் என்ற இளம்டாக்டரும், அவருடைய அழகிய மனைவியும், விவாகமாகி ஐந்து வருஷங்களாக சௌந்தர்பௌலில் வசிப்பதாக நினைத்துப் பார்த்தபோதெல்லாம் ஆச்சரியப் படுவதுண்டு. சௌந்தர் பௌல் என்ற ஊர் அவ்வளவு நாட்டுப்புறத்தில் இருந்தது. அங்கே அநேகமாக விவசாயிகள்தான் உடன் வசித்தனர். கண்ணுக்கு எட்டிய வரையில் ஒரே பசும்புல் தரைதான். அந்த ஊரில் ஒரு பாதிரியார் கூடக் கிடையாது.

அப்படியிருந்தும் டாக்டரும் அவருடைய மனைவியும் அந்தத் தனிமையை உணர்ந்ததில்லை. அவர்கள் வீட்டைச் சுற்றி ஒரு காய் கறித் தோட்டம். எப்பொழு

தாவது பந்துக்கள், உறவினர் வருவது உண்டு. தினசரி தபால், வாரம் ஒரு முறை வாசகசாலையிலிருந்து புஸ்தகங்கள் வரும்—அவர்களுக்கு வேலை சரியா யிருந்தது. வாழ்க்கை அமைதியாயிருந்தது.

ஒரு சமயம் ஸ்ரீமதி ஹௌஜரின் உறவினர் சிலர் கோபன் ஹேகனிலிருந்து வருவதாயிருந்தது. அதற்காக வீட்டில் பிரமாதமாக ஏற்பாடுகள் செய்து வைத்திருக் கையில் திடீரென்று அவர்கள் வரவில்லை யென்று தந்தி வந்துவிட்டது.

அதனால் இந்த தம்பதிகள் "ஏமாற்ற மடைந்தனர் என்பது வாஸ்தவம். ஏனெனில், அதற்காக ஏராளமான ஏற்பாடுகள் செய்திருந்தனர். அபரிமிதமான ஆகார வகைகள் தயார் செய்திருந்தனர்; வீட்டில் உள்ள சமான்களைத் தூக்கி எடுத்து சுத்தம் செய்து வைத்தி ருந்தனர். அதெல்லாம் வீண் என்றதும் ஏமாற்றமடைந் தனர். மற்றபடி வரவிருந்த விருந்தினர் வரவில்லையே என்பதைப் பற்றி அதிக வருத்தம் இல்லை. உண்மையில், சிறிது நேரத்தில் தங்களுடைய அமைதியான வாழ்க் கைக்குப் பங்கம் ஏற்படவில்லையே என்று எண்ணியதும் சந்தோஷம் கூட அடைந்தனர்.

டாக்டருடைய அறையில் அவர்கள் உட்கார்ந்திருக் கையில் மிஸிஸ் எம்மி சொன்னாள்: உங்களுக்குத் தெரியுமோ, இப்படி அவர்கள் படையெடுத்து வந்திருந்தால் எவ்வளவு தொந்தரவாக இருந்திருக்கும்? நான்கு நாட்களாய் நம்முடைய வீட்டுக்குள்ளேயே அன்னியர் மாதிரி நடமாடினேன்!" என்று.

அர்னால்ட் ஹௌஜர் புன்சிரிப்புடன் தன் மனைவியைப் பார்த்தார். அப்போது அவர்களுக்கு

இடையே இருந்த தூரம் அவ்வளவு அதிகமாக இல்லாதிருந்தால், அப்படியே தாவி, அந்த வார்த்தை களுக்காக அவளுக்கு ஒரு முத்தம் கொடுத்திருப்பார். ஏனெனில் அந்த நிமிஷத்தில் அவருடைய மனதில் ஓடிய எண்ணங்களுக்குத்தான் அவள் உருவம் கொடுத்தாள்.

அப்படியே அவர்கள் பல குடும்ப விஷயங்களைப் பற்றிப் பேசத் தொடங்கினர். தங்களுடைய குழந்தைகளின் உடல் நிலையைப் பற்றியும், கோழிக் கூடுகளைப் பற்றியும் பேசினுர்கள்.

அன்று தபால் சற்று தாமதமாகவே வந்தது. அப்போதுதான் தம்பதிகள் பத்திரிகைகளைப் படிக்கத் தொடங்கினர். ஏதோ வண்டி வரும் சத்தம் கேட்டது. அவர்கள் விட்டுவாசலில் வந்து நின்றது.

மறு நிமிஷம் வேலைக்காரி ஓடி வந்தாள். யாரோ ஒரு புது மனிதர் வந்திருப்பதாகத் தெரிவித்தாள்.

"அவருடைய பெயரைச் சொல்லவில்லையா? என்ருர் அர்னுல்ட்.

"இல்லை; ஆனுல் அந்த வண்டிக்காரனை எனக்குத் தெரியும். நெகஸ்டர் பௌல் பாதிரியாரின் வண்டிக் காரன்."

"அப்போது பாதிரியாரின் மைத்துனனுய்த்தான் இருக்க வெண்டும்."

"இல்லை. அவரைப் பார்த்தால் இந்தப் பக்கத்து ஆசாமியாய்த் தெரியவில்லை.

மிஸஸ் எம்மி குழப்பமடைந்தாள். ஏனெனில் வழக்கம்போல் அவளுக்கு ஆடை சரியாய் உடுத்திக் கொள்ள அவகாசம் இல்லை. காலையில் தரித்துக்

கொண்டே கௌனுடனேயே இருந்தாள். டாக்டருக்கும் அதே பிரச்னை தான். மாலை வேலைகளில் அவர் வெறும் அங்கியைத்தான் அணிவது வழக்கம். இப்போது ஒன்றும் செய்வதற்கில்லை. வந்தவரை எவ்வளவு நேரம் காக்கவைக்க முடியும்?

மனைவி படுக்கையறைக்குள் போனதும், "அவரை வரச் சொல்" என்றார் வேலைக்காரியிடம். அவர் எழுந்திருப்பதற்குள் கதவு திறந்தது. கண்ணியமான ஒருவர் உள்ளே நுழைந்து மிருதுவான குரலில் வணக்கம் சொன்னார். அவருடைய தலை வழுக்கை யைக்கண்டு அவருக்கு வயது ஐம்பதிருக்கும் என்று தோன்றியது. அவருடைய வழவழப்பான முகமும், சிவந்த உதடுகளும், ஒளி வீசிய விழிகளும், அவருடைய தோற்றத்துக்கு இளமையின் கவர்ச்சியைத் தந்தன.

"டாக்டர் ஹௌஜர்?" என்றார்.

"நான் தான்!"

"என்னை மன்னிக்க வேண்டும். தங்களிடம் ஒரு கோரிக்கை. என்னுடைய பெயரை அறிவிக்க முடியாமலிருக்கிறேன். தங்களுக்கு நான் பெயர் தெரியாத யாத்ரிகன். நீங்கள் திடுக்கிடுவதை நான் காண்கிறேன்.—நாம் உட்காருவோமா?"

"ஆஹா!"

"வந்தனம்—சுருக்கமாகச் சொல்லுகிறேன். இன்று பகல்தான் ஔஸ்டர் பௌலுக்கு நான் வந்தேன். என்னுடைய நண்பரான பாதிரியாரைப் பார்க்க வந்தேன். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக, அவர் தன் குடும்பத்துடன் எங்கோ போய்விட்டார். அவர் வீட்டில் அவரைச் சேர்ந்தோர் யாருமில்லை. இதற்காக

எவ்வளவு தூரத்திலிருந்து வந்தேன். என்னுடைய பால்யத் தோழருடன் சில நாள் சந்தோஷமாகக் கழிக்க எவ்வளவு ஆவலுடன் வந்தேன் என்பதை நீங்கள் அறிந்தால் என்னுடைய ஏமாற்றத்தை அறி வீர்கள். அங்கே இருந்த பாதிரியாரின் வேலையாட்கள் பக்கத்தில் ஒரு டாக்டருடைய குடும்பம் இருக்கிறது என்று தெரிவித்தார்கள். என்னுடைய குதிரைகள் களைத்திருந்ததால் பாதிரியாரின் வண்டியில் வந்தேன். உங்களுடன் உல்லாசமாகச் சிறிது காலம் போக்கலாம் என்றுதான் வந்தேன்."

"ஆஹா—தடை யில்லாமல். என்னுடைய மனைவியும், நானும் தங்களுக்கு உபசாரம் செய்யக் காத்திருக்கிறோம். ஆனால் மிஸ்டர்—"

"நீங்கள் கேட்பது புரிகிறது. இவ்வளவு தூரத் திற்குப் பிறகாவது நம்பி பெயரைச் சொல்லக்கூடாதா என்று நினைக்கிறீர்கள். ஆனால், டாக்டர்வாள், என் பெயர் மிஸ்டர் பீட்டர்ஸன், தொழில் வியாபாரம், என்றோ, அல்லது பெயர் மிஸ்டர் ஹான்ஸன்' எஞ்ஜினீர் உத்தியோகம் என்றாவது நான் சொல்லு கிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதனால் எவ்வளவு தூரம் உங்களுக்கு அதிகமாக என்னைப் பற்றித் தெரியப் போகிறது? இதனால் நம்முடைய பேச்சு வார்த்தைகள் ஒரு குறிப்பிட்ட நிலையில் போய் ஒடுங்கிவிடும். இப்போது எதைப்பற்றி வேண்டு மானாலும் தாராளமாகப் பேசலாம். அந்த ஆனந் தத்தை, எதற்குக் கெடுக்க வேண்டும். என்னை பைத்தியம் என்று நினைக்கலாம். நான் இங்கே திடும்பிரவேசமாய் வந்ததில் உங்களுக்கு எவ்வளவு

குழப்பம் ஏற்பட்டிருக்கும் என்பது எனக்குத் தெரியும். ஆனால் நான் அனுமதேயமாகவே இருந்துவிட்டால்தான் எனக்கு சௌகரியம்."

டாக்டருக்குச் சிரிப்பு வந்தது. அந்த நூதன மனிதனின், உற்சாகம் தொத்து நோயைப்போல் பரவிற்று.

"ஆமாம், வாஸ்தவம்தான்—உங்கள் இஷ்டம். ஆனால் உங்களை ஏதாவது சொல்லித்தானே ஆகவேண்டும். மனைவியிடம் எப்படி அறிமுகம் செய்வது ?"

"அப்போது,—ஆமாம்—என்னை **பிரின்ஸ் கார்னிவல்** என்று கூப்பிடுங்கள்."

அர்னால்ட் ஹௌஜர் இன்னொரு முறை சிரிக்க வேண்டி வந்தது. சற்று உரக்கவே சிரித்தார்.

"ஓர் இளவரசன் விருந்தாளியாக வருவது இது தான் முதல் தடவை" என்றார்.

"பேஷ்! டாக்டர் நீங்களும் நம்மைச் சேர்ந்த கோஷ்டிதான் !" என்றார் வந்தவர்.

அந்த சமயம் மிஸஸ் எம்மி உள்ளே நுழைந்தாள். வழக்கமான கறுப்பு ஆடையை அணிந்திருந்தாள். வந்தவர் எழுந்து மரியாதை செய்தார்.

சிரித்துக்கொண்டே அவளுடைய கணவன் சொன்னார். "இவர்தான் பிரசித்திபெற்ற விருந்தினர் பிரின்ஸ் கார்னிவல் ."

அவர்களுடைய உற்சாகத்தைக் கண்டு ஆச்சரிய மடைந்த மிஸஸ் எம்மி சற்று கோபத்துடன் தன் கணவனைப் பார்த்தாள்.

"இதெல்லாம் என்ன ?" என்றாள்.

" இதெல்லாம் என்னவென்ருல், இன்று பண்டிகை தினம். பிரசித்திபெற்ற ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவன் நான். கனம் வாய்ந்த ஹெளல்கிடைஸ் என்பவர்தான் என் தந்தை. என்னுடைய சகோதர னுடைய பெயர் டாம் பூல். என்னுடைய நாடு, லப்பர்லாண்ட். பிரசித்திப்பெற்ற புருக்களை விற்கும் வியாபாரி நான்."

இதைக் கேட்டதும் மிஸஸ் எம்மி குறிப்பாகத் தன் கணவனை நோக்கிஞள். அவருக்கும் சிறிது குழப்பமாகத்தான் இருந்ததென்ருலும் அவர் அதை வெளிக் காட்டாமல் மரியாதைக்காகச் சிரித்துக்கொண் டிருந்தார். அந்த அதிசய விருந்தினரைப் பற்றி அவரும் மேற்கொண்டு பேசத் தொடங்கினுர். சற்று நேரத்தில் எல்லோரும் கூடத்தை அடைந்தனர்.

அந்த இளம் டாக்டருக்கு சங்கடமாயிருந்தது. வந்தவர் தன் விளையாட்டை விட்டு சரியான முறையில் நடந்துகொள்வார் என்று எதிர்பார்த்துக்கொண் டிருந்தார். ஆனுல் அந்த உல்லாச புருஷனை "இளவரசன்" யாதொன்றையும் கவனியாமல் தன் போக்கில் பேசிக்கொண்டிருந்தான். கடைசியில் திடீரென்று பியானேவுக்கு அருகில் உட்கார்ந்து கொண்டு, அதைத் திறந்து, தன் விரல்களால் அழுத்தத் தொடங்கினுன்.

" இதில் யாருமே வாசிப்பதில்லைபோல் காண் கிறதே" என்ருன். அதற்கு அர்னுல்டு, தன் மனைவிக்கு சங்கீதம் பயில அவகாசமே இல்லையென்ருர்.

" அவகாசமா!" என்று சொல்லிக்கொண்டே வந்தவர் நடுக் கட்டையை வேகமாக அழுத்தினுர்.

பிறகு ஒரு பாட்டை வாசிக்கத் தொடங்கினர். மிஸஸ் எம்மி தலையை நிமிர்ந்து வியப்புடன் பார்த்தாள். கொஞ்சம் வாசிப்பதற்குள் வாத்தியத்தில் அவர் தேர்ச்சி உள்ளவர் என்பதை அறிந்து கொண்டு விட்டாள்.

" இந்தப் பாட்டு உங்களுக்குத் தெரியுமா? என்ருர் வந்தவர்.

" தெரியாது—எவ்வளவு நன்ருக யிருக்கிறது!" என்ருள் அவள் தன்னை மீறிய உற்சாகத்தில்.

" இதுதான் ஆரம்பம். முழுவதையும் வாசிக் கட்டுமா?"

அவள் சிறிது பின்னடைந்தாள்.

" உங்களுக்கு இஷ்டமானல் வாசியுங்கள்" என்ருள்.

" அப்படியானல் சரி—ஆனல் இந்த நட்சத் திரங்களை மின்னும்படி செய்ய வேண்டும். ஏனெனில் இந்தப் பாட்டுக்குத் தகுந்த ஒளிப் பிரவாகம் வேண்டும்" என்று, பக்கத்தில் நின்ற மெழுகுவர்த்தி தண்டுகளைப் பார்த்துச் சொன்ஞர். பிறகு "எனக்கு ஒத்தாசை செய்யுங்கள், என்ன?" என்ருர் டாக்டரைப் பார்த்து.

அர்னல்ட் ஹௌஜர் சந்தேகத்துடன் தன் மனைவியை நோக்கினர். அந்த விசித்திர மனிதனின் போக்கைத் தடுக்கும் சக்தி தனக்கு இல்லை யென்ற பாவனையில் அவள் தன் தோள்களைத் திருப்தியுடன் குலுக்கினள்.

அந்த விசித்திர மனிதன் யாருடைய சம்மதத்

208—4

தையும் எதிர்பாராமல் அங்கிருந்த எட்டு வர்த்திகளையும் ஏற்றினர்.

"மிஸஸ் ஹௌஜர்! இந்த அல்ப்ஃமெழுகுவர்த்திகளினுல் எவ்வளவு வித்தியாசம் ஏற்பட்டு விட்டது பாருங்கள்! இதோ பாருங்கள்! இன்னெரு யோசனை! இந்த ஆனந்தமான இரவில் நாமும் தகுதியான முறையில் ஆடையணிந்துகொள்ள வேண்டாமா? நல்ல வேளை! என் கைப்பெட்டியைக் கொண்டுவந்திருக்கிறேன். உங்களிடமும் ஏதாவது பட்டு ஆடைகள் உள்ளே யிருக்கவேண்டும். அவைகள் எதற்காக உள்ளே கிடந்து புழுங்க வேண்டும்?—அடேடே! என்னை முறைத்துப் பார்க்கிறீர்களா? உங்கள் கணவரின் அனுமதியை விரும்புகிறீர்களா? என்னை வெளியே தள்ளி கதவை மூடவேண்டும் என்று தோன்றுகிறதல்லவா! ஆனுல் அப்படி என்னை எளிதில் தள்ள முடியாது. என்னுடைய பெரிய தந்தையான மாட்சிமை தங்கிய பெரும்பூதனர் அவர்களின் சாயல் நான்—"

அர்னுல்டு ஹௌஜர் இடைவிடாமல் சிரிக்கத் தொடங்கினர். மிஸஸ் எம்மியின் முகபாவம் குழப்பமான கோபத்துக்கும், வேடிக்கையான புன்னகைக்கும் இடையே ஊசலாடிற்று.

"இதற்கெல்லாம் என்ன அர்த்தம்! இந்த வீட்டை தலை குப்புறக் கவிழ்க்கப் போகிறீர்களா? என்ருள் உரக்க.

"அதேதான் உன்னுடைய நோக்கம். விடுதலையின்றி இருட்டறைக்குள்ளே கிடந்து வாடும் எல்லா ஜீவன்களுக்கும் விடுதலையளிக்க விரும்புகிறேன்.

என்னைத் தடைசெய்ய வேண்டாம்! அதன் பிறகு, அன்பார்ந்த அம்மணி, தங்களுக்கு இன்னிசை விருந்தளிப்பேன்---சங்கீதத்தின் மூலம் சுவர்க்க லோகத்தையே திறந்து காட்டுவேன். சரிதானா? இன்னும் இருபது நிமிஷங்களில் நாம் இங்கு மீண்டும் சந்திப்போம்---அவரவர்கள் தங்கள் தங்கள் சிறந்த ஆடைகளை உடுத்திக் கொள்ளவேண்டும். டாக்டர் வாள், தயவுசெய்து தனி அறைக்கு வழிகாட்டுங்கள். இருங்கள்---ஆமாம். அதோ இருக்கிறது. வந்தனம்."

அந்த மனிதன் உள்ளே நுழைந்து கதவை மூடிக் கொண்டதும் எம்மி தன் கணவனிடம் ஓடி வந்தாள்.

"இந்தப் பைத்தியத்தை என்ன செய்கிறது? அவரை நீங்கள் உள்ளே விட்டிருக்கக்கூடாது."

"அவரைக் கண்டு பயந்து கொண்டு விட்டாயா?" என்று தன்னையுமறியாமல் அவளை அணைத்துக் கொண்டே கேட்டார். சிறு குழந்தையைப்போல் அவளுடைய முகத்தில் தோன்றிய அந்த பீதி உணர்ச்சியை அவர் கண்டு வெகு காலமாகிவிட்டது.

"அவன் யாராயிருக்கக்கூடும்?"

"தெரியவில்லை. ஆனால் பாதிரியாரின் பால்யத் தோழனானபடியால் நாம் உள்ளே வராதே என்று சொல்ல முடியவில்லை. அவன் பெயர் எதுவானால் என்ன?"

"இப்போது என்ன செய்கிறது?"

"என்ன செய்ய முடியும்? ஆரம்பித்துவிட்டபடியால் இந்த வேடிக்கையைத் தொடர்ந்து முடித்துவிட வேண்டியது தான். வாஸ்தவத்திலேயே அவனைப்

பார்த்தால் பைத்தியமாயிருந்தாலும் வேடிக்கையாயிருக்கிறது. மேலும் இன்று பண்டிகை தினம்."

"அப்படியானால் அவன் சொன்னபடி நாம் புது ஆடை உடுத்திக்கொள்ள வேண்டும் என்கிறீர்களா?"

"ஊஹூம். வேண்டியதில்லை. ஒரு புட்டி ஒயினை சாப்பாட்டு மேஜையில் வைத்து விட்டால் போதுமானது. அதுவும் பாதிரியாரைக் கௌரவிப்பதற்காக."

"சரி, ஆனால் நீங்கள் விரும்பினால்—அதாவது உங்களுடைய சந்தோஷத்துக்காக வேண்டுமானால் பட்டுக்கௌனை அணிந்து கொள்ளுகிறேன்."

அவருடைய சட்டைப் பொத்தானைத் திருகிக் கொண்டே கேட்டாள்.

"நீ வேடிக்கை பண்ணுகிறாயா —".

"இல்லவே இல்லை — அது முட்டாள் தனம், வெறும் பைத்தியக்காரத்தனம் என்பது நிச்சயம். ஆனால் இந்த நாடகத்தை முழுவதும் நடிக்க வேண்டுமானால், அன்றியும், நீங்கள் சொன்னதைப்போல் இன்று பண்டிகை தினமாயிருக்கிறபடியால் தான் —"

"வாஸ்தவம் தான். அந்தப் பைத்தியத்துக்கு சமாதானம் சொல்வதற்குள் பிராணன் போய்விடும். நாமும் சிறிது பைத்திய வேஷம் போடுவோம்!".

"இதென்ன கேலிக்கூத்து!" என்றாள் எம்மி. அவளுடைய கணவன் பீதி கலந்த உற்சாகத்துடன் சிறு பையனைப்போல் அவள் கையைப்பிடித்து இழுத்துக் கொண்டு படுக்கையறைக்குள் நுழைந்தான்.

சிறிது நேரம் கழித்து, போஜனம் தயாராயிருப்பதை தெரிவிக்க உள்ளே நுழைந்த வேலைக்காரி, உல்லாச ஆடையணிந்த விருந்தினனைத் தவிர வேறு

யாரும் இல்லாதிருப்பதைக் கண்டாள். அவரும் பூச்செடிகளை அங்குமிங்கும் நகர்த்திவைத்துக் கொண்டிருந்தார்.

அறை யெங்கும் ஒளிமயமாய் இருப்பதை கண்டு பிரமித்த வேலைக்காரி "கடவுளே! இங்கே என்ன இன்றைக்கு!" என்றாள்.

"உனக்குத் தெரியாதா, கண்மணி! இன்று விசேஷ விருந்து வரப் போகிறது!".

"யார் வருப்போகிறார்கள்?" என்றாள் அவள் உடலை நெளித்துக்கொண்டு.

"யாரென்று சொல்லுகிறேன், என் காதல் கள்ளி! கண்ணுக்குத் தெரியாதவர், காதுகளால் கேட்க முடியாதவர். இப்போது வந்து இதைக் கொஞ்சம் சுத்தம் செய்ய ஒத்தாசை செய், வா."

இதற்கிடையில் வீட்டு எஜமானர் தன் அலங்கார ஆடையை அணிந்து கொண்டு படுக்கை யறைக்கு வந்தார். அப்போதுதான் அவருடைய மனைவி மேல் அங்கியை எடுத்து தரித்துக்கொண்டிருந்தாள். நிலைக் கண்ணுடிக்கெதிரில் நின்று, மூச்சைப் பிடித்துக் கொண்டு இடைவாரைப் பூட்டிக்கொண்டிருந்தாள்.

"ரொம்ப ஜோர்!" என்றார் டாக்டர் உற்சாகத்துடன்.

"தொடாதீர்கள்! நிஜமாகவே நன்றாயிருக்கிறதா?"

"எம்மி, நிஜமாகவே நீ பிரமாதமாயிருக்கிறாய். எனக்கே உன்னை அடையாளம் தெரியவில்லை.."

"இதைக்கூட வைத்துக் கொள்ளவா?" என்று

மேஜைமேல் இருந்த சிறு வெள்ளிக் கிரீடம் ஒன்றைக் காட்டினுள்.

"பேஷாக வைத்துக்கொள்!" அவளுக்குப் பின் புறம் நின்று, எதிரில் இருந்த கண்ணுடிக்குள் தெரியும் அவளுடைய பிம்பத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார். "ரொம்பப் பிரமாதமாயிருக்கிறது. எம்மி! நீ ரதி தான்!"

தன்னை மீறிய உணர்ச்சி வேகத்தில் அவள் மெய்ம் மறந்து அவர்மேல் பாய்ந்து அவருடைய கழுத்தில் இருகைகளையும் போட்டு அணைத்துக் கொண்டாள். "நிஜமாகவா?" என்ருள்.

அதே சமயம், வெளியில், பியானேவிலிருந்து கணீ ரென்று ஒரு ஸ்வரம் எழுந்து. அதிலிருந்து சிந்தையைக் கிறுக்க வைக்கும் இசை வெள்ளம் கிளம்பி வந்து அவர்களைத் தாக்கியது. அவர்கள் அசைவின்றி நின் றனர். எம்மியின் கைகள் செயலற்று கணவனின் கழுத்தைச் சுற்றி நின்றன. தன்னிரு கண்களையும் மூடி அவருடைய இதழ்களை இழுத்துத் தன் முகத் துடன் பொருத்திக் கொண்டாள்.

கையில் கை கோர்த்தபடியே இருவரும் வெளி அறையை அடைந்தனர். அவர்களுடைய மனமும் உற்சாகம் நிறைந்த அந்தச் சூழ் நிலையில் லயித்து விட்டபடியால் அவர்களுடைய மனத்தில் இருந்த குழப்பம் அகன்று விட்டது.

அதற்குள் வந்தவர் அறையை நன்ருக அலங்கரித்து விட்டார். அவருடைய மந்திர சக்தியினுல், என்றைக் கும் தன் அழுக்கடைந்த கந்தல் ஆடையை விட மன

மில்லாத வேலைக்காரியும் கூட புது ஆடைகள் அணிந்து கொண்டு விட்டாள்.

அவர்கள் போஜனத்திற்கு அமர்ந்தனர். உறவின ருக்காகத் தயார் செய்யப்பட்டிருந்த ஆகார வகைகள் எல்லாம் இப்போது பயன்பட்டன. வெகு காலமாக சேமித்து வைக்கப்பட்டிருந்த பான வகைகளெல்லாம் வெளியே புறப்பட்டன. ஆனுல் அந்த ஆனந்த மயமான சுற்றுணர்ச்சிக்கு இவை மட்டும் காரணம் அல்ல.

மேஜையடியில் உட்கார்ந்திருக்கையிலேயே விருந் தாளி ஒரு சிறு யாழை எடுத்து மீட்டத் தொடங்கினுர். அந்தப் பாட்டுகளைக்கேட்ட எம்மியும் அவளுடைய கணவனும் உன்மத்தம் பிடித்தவர்கள் போலானுர்கள். அந்த மனிதன், அளவுக்கு மீறிய களிப்புணர்ச்சியை வாரி இரைத்துக்கொண்டு, கவர்ச்சியே உருவாக உட்கார்ந்திருந்தார்.

கடைசியாக காதல் தேவனின் லீலைகளைப் பற்றிப் பாடினுர். பாடி முடிந்ததும் தன்னுடைய கையை எடுத்து வந்தனம் செலுத்தத் தூக்கினுர்.

அர்னுல்ட் ஹௌஜரும் சிரித்துக்கொண்டே தன் னுடைய கையையும் தூக்கினுர். அதே சமயம் யதேச்சையாக அவருடைய பார்வை தன் மனைவியின் மேல்பட்டது. அவளும் தன் குடையைத் தூக்கினுள். ஆனுல் அவளுடைய களிவெறி கொண்ட பார்வை அதிதியின்மேல் லயித்திருந்தது. கணவனுடைய களிப்பு திடீரென்று மறைந்தது. அவர் மௌனமாக ஒயினை அருந்தினுர். எம்மி ஒன்றையும் கவனிக்க வில்லை. ஆனுல் வந்தவர் நடந்ததை யெல்லாம்

கவனித்து விட்டார். உடனே தான் புறப்பட வேண்டிய காலம் வந்துவிட்டது என்பதை உணர்ந்தார். மீண்டும் ஒருமுறை தன் கையை எடுத்தார். அவர்களுடைய உபசாரத்திற்கு நன்றி செலுத்தினர். உடனே கிளம்பிவிட்டார்.

அடக்கமான மரியாதையுடன் டாக்டர் அவரை வழியனுப்பினர். எம்மி கதவோரத்தில் நின்று கையை ஆட்டி விடைகொடுத்தாள். திரும்பும்போது பாடிக்கொண்டே உள்ளே நுழைந்தாள். புருஷன் திரும்பியதும் தன்னுடைய மெய்ம்மறந்த களிப்பில் அவனை இறுக அணைத்துக்கொள்ளப் போனவள் அவன் முகத்தைக் கண்டதும் தயங்கி நின்றாள். அவர் அவளை முறைத்துப் பார்த்துத் தன்னைத் தொந்திரவு செய்யவேண்டாம் என்று தெரிவித்தான்.

முதலில் எம்மி அவர் வேடிக்கை செய்வதாக நினைத்தாள். பிறகு அவர் உள்ளேபோய் மௌனமாக உடையை மாற்றிக்கொண்டு வந்ததும் தான் ஒருவாறு, உணர்ந்துகொண்டாள்.

"என்ன இது?" என்றாள்.

"சில கடிதங்கள் எழுதவேண்டி யிருக்கிறது. அவை முடிய நேரமாகும்."

அப்போதுதான் புரிந்தது. "என்ன அர்னல்ட்—" என்று அவனைத் திட்டவேண்டும் என்று நினைத்து நெருங்கினாள். ஆனால் வெளுத்துக் கோபத்தால் திகழ்ந்த அவன் முகத்தைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் பயந்துபோனாள்.

"தயவு செய்து என்னைத் தொந்திரவு செய்யாதே.

இன்றைக்கு வேண்டிய விளையாட்டு ஆகிவிட்டது. போய்ப் படுத்துத் தூங்கு."

ஒரு விநாடி துக்கத்துடன் அவரைப் பார்த்தாள். பிறகு கர்வத்துடன் தலை நிமிர்ந்தாள். "வெட்கக் கேடு!" என்று சொல்லிக்கொண்டே அறையை விட்டு வெளியேறினாள். இருந்தபோதிலும் ஆடையைக் களைந்துவைக்கையில் அடிக்கடி கதவருகே வந்து எட்டிப் பார்த்தாள். அன்றிரவு வெகு சிரமத்துடன் அவரிடம் போகாமலே விலகியிருந்தாள். வெகு நேரம் போராடி விட்டுக் கடைசியில் அழுதுகொண்டே கண்ணயர்ந்தாள்.

மறுநாளும் சமரஸம் ஏற்படவில்லை. அர்னால்ட் ஹௌஜர் வெகு தொலைவில் இருந்த ஒரு நோயாளி யைப் பார்க்கப் போகவேண்டியிருந்தபடியால் நாள் முழுவதும் வீட்டுக்கு வரவில்லை. அன்று அந்தி வேளையில் வீட்டுக்குத் திரும்பியதும், பழக்கமான விட்டு விளக்கைக் கண்டதும் அவன் மனம் இளகிற்று. எம்மி ஜன்னலடியில் உட்கார்ந்திருந்தாள். அன்று என்றுமில்லாத வழக்கமாய் அவள் மாற்று உடை அணிந்திருந்ததுடன் அதோடு ஒரு வெள்ளி புரூச்சும் அணிந்திருந்தாள். அது அவளை அவர் மணம் செய்து கொள்ளுமுன் கொடுத்தது.

அருகில் வந்ததும் அவர் குனிந்துகொண்டே "நமக்குள் சண்டை எதற்கு, எம்மி?" என்றார். மௌனமாக அகாரணமாகக் கடிந்து கொள்ளப்பட்ட சிறு குழந்தையைப்போல் அவள் கண்கள் நிறைந்த கண்ணீருடன் திரும்பினாள். ஆனால் அவருடைய முகத்தை அலங்கரித்த புன்னகையைக் கண்டதும்

திடீரென்று தன்னிரு கைகளையும் விரித்து அவர் கழுத்தைச்சுற்றி அணைத்துக் கொண்டாள்.

இருந்தபோதிலும் அவர்களுடைய சின்னஞ் சிறு சுவர்க்க பூமியில் ஒரு விஷசர்ப்பம் புகுந்துவிட்டது என்ற உண்மை நிலைத்துவிட்டது.

மறுநாள் மாலை டாக்டர் வெளியிலிருந்து வரும் பொழுது, தன் மனைவி பியானோ வாசிப்பதைக் கேட்டார். இந்த வழக்கமற்ற வழக்கத்தைக் கண்டு அவர் சிறிது தயங்கி நின்று கேட்டார். அந்த வாத்தியத்தின் ஒலியில் முதல் நாள் கேட்ட அந்த அதிதியின் பாட்டைக் கேட்டார். அவள் ஞாபகத்திலிருந்து அதை வாசிப்பதைப் போலிருந்தது.

அவர் உள்ளே நுழைந்ததும் சங்கீதத்தை நிறுத்திவிட்டு அவர் முகத்தை ஆவலுடன் பார்த்தாள். அதிலிருந்தே அவளுடைய சிந்தனை வேறெங்கோ அலைந்து கொண்டிருந்தது என்ற சந்தேகம் ஊர்ஜிதமாயிற்று. அவர் படுக்கை யறைக்குள் சென்று உடையை மாற்றிக்கொண்டு வெளியே வந்ததும் அவள் சிறிது தயக்கத்துடனேயே, விளக்கு வேண்டுமா என்று கேட்டாள். அன்றைய தபால்கள் பார்க்கவேண்டியிருந்தபோதிலும் அவர் வேண்டாம் என்றே சொன்னார்.

சிறிது நேரம் கழித்து, அந்த இருண்ட அறையின் நிசப்தத்தைக் கலைத்து அவர் " நீ என்ன வாசித்தாய்?" என்று கேட்டார். "அந்தப் பாட்டை எங்கோ கேட்டிருந்ததாக ஞாபகம்."

" இருக்கமுடியாது. இது என் சாதகம்தான்."

வேறு பதில் அவளுக்கு அகப்படவில்லை. தன் மன அந்தரங்கத்திலே உதிக்கும் மௌனக் கனவுகளை அவள் தனக்குள்ளாகவே ஒப்புக்கொள்ள விரும்ப வில்லை. ஆண்களுக்குப் புரியாத இந்த உணர்ச்சி வேகத்துக்கு—பெண் உள்ளத்தின் அடியிலே உதித்து எட்டாத உயரங்களைச்சுற்றி வட்டமிடும் அந்தகைய அபிலாஷைக்கு—பெண்ணின் உள்ளன்பிற்கு ஒரு அதி சயக் கவர்ச்சி அளிக்கும் அந்த ஆசைக்கு என்ன பெயர் சொல்வது?

அன்றிரவு டாக்டர் தன் படுக்கையறையை அடைந்தபோது, தலையணையின்மேல் மஞ்சள் ரோஜா வின் இதழ்கள் பரப்பப்பட்டிருந்ததைக் கண்டார்.

இனிச் சொல்லவேண்டியது ஒன்றுமில்லை. அன்று பாதிரியாரின் வீட்டுக்கு யாருமே வரவில்லை. அது மட்டும் இல்லை. பாதிரியார் குடும்பமும் எங்கும் வெளியூர் போகவேயில்லை. பாதிரியின் வண்டிக் காரனைக் கண்டதாக வேலைக்காரி சொன்னது வெறும் பிரமையா யிருக்கவேண்டும் என்றே தோன்றிற்று. மேலும், பாதிரியார் தனக்கு அந்தமாதிரியான பால்யத் தோழர் யாருமே இல்லை என்றும் தெரிவித்தார்.

எப்படி யிருந்தபோதிலும் அதிதியின் விஜயத்தி னால் அந்த இளந் தம்பதிகளின் வாழ்க்கையில் தெளி வான மாறுதல் ஏற்பட்டது. அவர்களுடைய வீட்டிலே காதல்தேவன் குடிபுகுந்தான். அதை யொட்டியே, வாழ்க்கையின் ஜீவத்துடிப்பான நிச்சயமற்ற சஞ்சலம் மிகுந்துநின்றது. மாறுதலில்லாத அவர்களுடைய சுவர்க்க வாழ்க்கையில், சலிப்பளிக்கும் நிலைமை மாறி

விட்டது. அதற்குப் பதிலாக மனத்தைத் திறந்து விட்டு விரிவாக்கும் சோகம் கலந்த ஏக்கம் அங்கே குடி கொண்டது.

அடுத்த மாரிக்காலத்தில் அந்த வீட்டிலிருந்து வெளிவந்த இன்னிசை யொலியும், கேளிக்கைகளின் எதிரொலியும், நிரந்தர சலனத்தை அறிவுறுத்தி சதா ஓடிக் கொண்டிருக்கும் மேக மண்டத்திலே புகுந்து ஆகாசத்தில் போய்க்கலந்தன.